விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே


சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 22 வியாழக்கிழமை (05.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணை

# 46 மேலதிக வாக்குகளால் தோல்வி

### கொழும்பில் பட்டாசு வெடித்து ஆரவாரம்



**(கொழும்பு) பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் தோல்வி அடைந்துள்ளது. குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 76 வாக்குகளும் எதிராக 122 வாக்குகளும் பெறப்பட்டது. 26 பேர் வாக்களிப்பில் பங்கு கொள்ளவில்லை.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 47-வது நம்பிக்கையில்லா பிரேரணை சுமார் 12 மணித்தியால விவாதங்களின் பின்னர் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது இலங்கை வரலாற்றில் இதுவரை 47 நம்பிக்கையில்லா பிரேரணைகள் 23

## தொடருந்து மோதியதில் பாடசாலை மாணவன் பலி

### வவுனியாவில் சோகம்



(குருமன்காடு)

கொழும்பு - யாழ் புகையிரதத்தில் மோதுண்டு வவுனியாவில் 17 வயதுடைய பாடசாலை 23

## வலி. கிழக்கு பிரதேச சபையில் கை மற்றும் வீணை துணையுடன் த.தே.கூட்டமைப்பு ஆட்சியமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையினையும் கை மற்றும் வீணை. ஆகியவற்றின் துணையுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

வலி கிழக்கு பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் 23

### ஈ.பி.டி.பி; ஐ.தே.க ஆதரவுடன்

## நல்லூர் பிரதேச சபையினை கூட்டமைப்பு கைப்பற்றியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பிரதேச சபையினையும் ஈ.பி.டி.பி. மற்றும் ஐ.தே.கவின் ஆதரவுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியது.

பிரதேச சபையின் தவிசாளராக த.தியாகமூர்த்தி பொறுப்பேற்றார். நல்லூர் பிரதேச சபைக்கான முதலாவது சபை அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் மா.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் கூடியது.

இதன்போது தவிசாளர் தெரிவுக்காக பெயரினை பிரேரிக்குமாறு கோரப்பட்ட போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் த.தியாகமூர்த்தி பிரேரிக்கப்பட்டார். 24

## கேப்பாப்பிலவில் 25 பராக் குண்டுகள் நேற்று மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பகுதியில் படையினர் வசம் 23

## கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக

### பிரதமர் எழுத்துமூல உறுதிமொழி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட 10 கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுத்துமூல உறுதிமொழியை வழங்கியுள்ளார் என கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இந்தத் தகவலை வழங்கினார் என அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அரசியலமைப்பு மறுசீரமைப்பு பணிகளைத் துரிதப்படுத்தல், அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுவித்தல், காணிகளை விடுவித்தல், காணாமற்போனோர் அலுவலகத்தின் பணிகளை துரிதமாக இயங்க வைத்தல், மகாவலி திட்டத்தில் மக்களை வெளி 23

### சுதந்திரக்கட்சியினர் அனைவரும்

## வாக்களித்திருந்தால் முடிவு மாறியிருக்கும் - மகிந்த

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித் 04

## வல்வெட்டித்துறை கடற்கரையில்

### வயோதிபரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை கடற்கரையில் வயோதிப மாது ஒருவரின் சடலம் நேற்று மதியம் கரையொதுங்கியுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கரையொதுங்கிய சடலம் பாரதி வீதி, கம்பர்மலையைச் சேர்ந்த 76 வயதுடைய துரைசிங்கம் அருந்தவம் 23

## தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபி புனரமைப்பு

### யாழ்.மாநகர சபை முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினைவிடத்தை புனரமைப்பு செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகளின் அதியுச்ச அரசியல் வடி 24

## பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை

### அமைச்சரவையிலிருந்து நீக்குமாறு எழுத்துமூலம் ரணிலிடம் கோரிக்கை

(கொழும்பு)

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 6 அமைச்சர்களை அமைச்சரவையிலிருந்து நீக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் ரணிலிடம் எழுத்துமூல கோரிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் எஸ்.பி.திசாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜெயசேகர, அநுர பிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி மற்றும் செனவிரத்ன ஆகியோர் நம்பிக் 23

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மன்னார் ஜோசப்வாஸ் நகரில் குடும்பஸ்தரை காணவில்லை

## பொலிஸில் முறைப்பாடு

(மன்னார்)

மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தை வதிவிடமாக கொண்ட 8 பிள்ளைகளின் தந்தையை காணவில்லை என மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. விடத்தல் தீவைப் பிறப்பிடமாகவும், மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தை வதிவிடமாகவும் கொண்ட 8 பிள்ளைகளின் தந்தையான மனுவேல் பிள்ளை (அல்பேட்) வயது-71 என்பவர் கடந்த 26 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து கடந்த 26 ஆம் திகதி மதியம் வெளியே சென்ற நிலையில் அவர் வீடு திரும்பவில்லை.

அவரை தேடியும் எங்கும் கண்டு பிடிக்க முடியாத நிலையில் அவர் காணாமல் போயுள்ளமை தொடர்பில் கடந்த சனிக்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையம் அல்லது 0773284387, 071610 3546 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறு உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-281)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்களான
திருமதி சுதாஜினி சிவபஞ்சாட்சரம்
திருமதி சீதாலட்சுமி பேரானந்தலிங்கம்
ஆகியோர் கொழும்பு BMICH இல் 28.03.2018 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.Ed பட்டத்தினைப் பெற்றமையினையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகளைப் பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/உருத்திரபுரம் ம.வி
(சி-2115)



பாராட்டி
வாழ்த்துகின்றோம்
திருமதி
ஒளிமலர் கந்தசாமி
(Sp.Tr.Primary Edu)
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2018.03.28ல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி (B.Ed) பட்டத்தைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஒளிமலர் கந்தசாமி அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்
Best Wishes
பாடசாலைச் சமூகம்,
கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை
இத்தாவில், பளை.
(C-3516)

பாராட்டி
வாழ்த்துகின்றோம்



கடந்த 2018.03.27ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்வி மாணி பட்டம் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.நடராசா சண்முகலிங்கம், திருமதி வத்சலா ஸ்ரீரங்கநாதன், திருமதி கலாநிதி தவதீசன் ஆகியோரை மனதார வாழ்த்துகின்றோம்.

திரு.நடராசா சண்முகலிங்கம்



திருமதி வத்சலா ஸ்ரீரங்கநாதன்



திருமதி கலாநிதி தவதீசன்

நலன்புரிக் கழகம்
இராமநாதபுரம் கிளிநொச்சி
கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)
க.பொ.த (உ/த) மாணவர் அனுமதி-2020

கணித, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, வர்த்தக துறைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியான மாணவர்கள் விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.
தொழிநுட்ப பிரிவிற்கு மாணவிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.
ஆண் மாணவர்களுக்கு விடுதி வசதி உண்டு.
விண்ணப்ப முடிவு திகதி 27.04.2018

மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசில்கள்

•கணிதத்துறையில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெறும் மாணவனுக்கு 100,000/= பணப்பரிசு M.K.Singam Scholarship
•கணிதத்துறை மாணவர்களுக்காக ரூபா 100,000 புலமைப்பரிசில் ஸ்ரீரஞ்சன் நடராஜன் குடும்பத்தினால் வழங்கப்படுகின்றது.
•மேலும் கணித விஞ்ஞான துறையில் பயிலும் 10 மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்கு மாதாந்தம் கல்வி ஊக்குவிப்பு ரூபா 3000 பண உதவி பழைய மாணவர்கள் சங்கத்தால் வழங்கப்படும்.
•பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைக்கான முழுச்செலவினையும் பழைய மாணவர்கள் பொறுப்பேற்பர்.
•குடும்ப வறுமை காரணமாக பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 10000 பல்கலைக்கழக படிப்பு முடியும் வரை வழங்கப்படும். (கந்தசாமி சரநாதன் புலமைப்பரிசில்)
•மானிப்பாய் நண்பர்கள் வட்டம் மூலம் வறுமை கோட்டில் வாழும் மாணவர்களுக்கு 2500/= விசேட புலமைப்பரிசில்.
தொலைபேசி இல:-021 225 5658 (சி-2116) அதிபர்



அண்மையில் நடைபெற்ற யாழ் நகர் விக்டோறியா வீதியில் அமைந்துள்ள யாழ். கலாலயா பயிற்சியகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. இ. ஆனோல்ட் அவர்கள் உரையாற்றுவதனையும், கேக் ஐசிங் உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், முக ஒப்பனை, மற்றும் வெளிகிடுத்துதல் பயிற்சிகளின் சிறந்த மாணவி ஒருவருக்கு முதன்மை விருந்தினர் அவர்களின் துணைவியாரும் மேற்படி பயிற்சி நிலையத்தின் பழைய மாணவியுமான திருமதி நளாயினி ஆனோல்ட் அவர்கள் சான்றிதழ் வழங்குவதையும், பயிற்சிகளை நிறைவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட மாணவிகள் பயிற்றுவிப்பாளர்களுடன் அமர்ந்திருப்பதனையும் காணலாம். (சி-2119)

# ரணிலுக்கு எதிராக வாக்களித்தால் சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் அமைச்சரவைக்குள் வர முடியாது

## ராஜித பகிரங்க எச்சரிக்கை



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனைக்கு வாக்களிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மீண்டும் அமைச்சரவைக்குள் வரமுடியாது என அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரட்ன பகிரங்கமாக எச்சரித்தார்.

அத்துடன், பிரதமருக்கு எதிராக வாக்களித்து விட்டு அமைச்சரவைக்கு வருவதற்கு அவர்களுக்கு தார்மீக உரிமையில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்க உதவுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எந்த சந்தர்ப்பத்திலும் கூறவில்லை எனவும் ராஜித தெரிவித்தார்.

எது எப்படி இருந்த போதிலும் இந்த வருடம் திருடர்களின் இறுதி வருடம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# உங்களுக்கு மக்கள் பலம் இல்லை நாடாளுமன்றில் விமல் ஆவேசம்!



(கொழும்பு)

உங்களுக்கு மக்கள் பலம் இல்லை. அவ்வாறு மக்கள் பலம் இருந்திருந்தால் உள்ளுராட்சி சபை தேர்தலில் நிரூபித்து காட்டியிருப்பீர்கள் என விமல் வீரவன்ச நாடாளுமன்றில் ஆவேசமாகத் தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இழக்கப்பட்டு விட்டது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனையுடன் அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இல்லாமல் போகின்றது. இப்போது நாடாளுமன்ற தேர்தலை நடத்துங்கள். நாம் யார் என்பதை நிரூபித்து காட்டுவோம். எமக்கு மக்கள் பலம் இருக்கின்றது. அர்ஜுன் மகேந்திரன் இன்னும் சிங்கப்பூரில் இருக்கின்றார். அவரை இங்கு கொண்டு வரமாட்டார்கள். கொண்டு வந்து விசாரணை நடத்தவும் மாட்டார்கள்.

கண்டி சம்பவத்தின் போது "இந்த நாட்டில் இருப்பது வெட்கம்" என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். இந்த நாட்டில் இருப்பது வெட்கம் இல்லை. பிரதமருக்கு ஆதரவாக வாக்களிப்பதே வெட்கமான விடயம் என விமல் சுட்டிக்காட்டினார்.

மேலும், நேற்று முன்தினம் முதல் பிரதமருக்கு எதிராக இருந்த ஹக்கீம் அவருக்கு ஆதரவாக மாறிவிட்டார். இன்று இருப்பது உண்மையான ஹக்கீம் இல்லை. ஹக்கீம் உள்ளிட்ட அமைச்சர்களின் ஆடைகள் களையப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பணம் பெற்றுக் கொண்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கின்றது. மனச்சாட்சிக்கு பதிலாக பணச்சாட்சியே பேசுகின்றது எனவும் குற்றம் சுமத்தினார்.

அரசாங்கத்தைச் சேர்ந்த 22 பேர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக கையுயர்த்தினால் பெரும்பான்மை பலம் இழக்கப்பட்டுவிடும்.

மூன்று மாத காலத்திற்குள் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உறுதியளித்தே இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு பெறுக் கொள்ளப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச உரையாற்றும் போது சபையில் கூச்சல் எழுப்பப்பட்ட நிலையில், சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் குறுக்கிட்டு உரையாற்றியிருந்தார்கள்.

எனினும் அவர்களுடைய பேச்சுக்களுக்கு விமல் வீரவன்ச மிகவும் ஆவேசமாக பதில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய ரீதியில் முதலிடம் வந்த மாணவிக்கு ஆளுநர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழியில் பரீட்சை எழுதியவர்களில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட வேம்படி மகளிர் கல்லூரி மாணவியை தனது அலுவலகத்திற்கு அழைத்து வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே பாராட்டினார்.



பாடசாலை அதிபர் மற்றும் பெற்றோர் சகிதம் யாழ் சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்திற்கு நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் சென்ற மாணவி மிருதி சுரேஸ்குமாருக்கு பரிசில் பொதியினை வழங்கி ஆளுநர் கௌரவித்தார்.

யாழ்.குடாநாட்டு மாணவர்கள் அண்மைக்காலமாக கல்வியில் முன்னேற்றம் கண்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்த ஆளுநர் மாணவி மிருதி மேலும் கல்வியில் முன்னேற்றம் கண்டு நாட்டிற்கு சேவையாற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தார். (இ-7-60)

# 'திகன வன்முறைகளின் பின்னணியில் மகிந்த ஆதரவாளர்கள்'- கிரியெல்ல

(கொழும்பு)

கண்டி - திகன மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தாமரை மொட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் இருவருக்கு தொடர்புகள் காணப்படுவதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிரணியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸாரும் அறிந்திருந்ததாகவும், இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு பொலிஸாருக்கு தாம் தொலைபேசியில் தொடர்புகொண்டு .அறிவுறுத்தல் வழங்கியதாகவும், எனினும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான பிரேரணை பொருத்தமானது

## ஜே.வி.பி. எம்.பி.பிமல் கருத்து

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்துள்ளமை பொருத்தமானது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில நேற்று விவாதிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக எமது நிலைப்பாட்டை நாங்கள் முன்கூட்டியே கூறிவிட்டோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளமை பொருத்தமானது.

ஊழல்வாதிகளை பாதுகாக்குமாறு கூறி, கோப் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் தொல்லைகளை கொடுத்தனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

05.04.2018

பங்குனி 22, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 8.29 மணிவரை

அனுசம் முற்பகல் 1.39 மணிவரை

சுபநேரம் 7.39-9.09 மணிவரை

இராகுகாலம் 1.39-3.09 மணிவரை

வளவன்

கிரகநிலை: சூரி., புத | சுக் | ராகு | கேது | சனி., செவ் | குரு., சந்

சந்திராஷ்டமம்: அச்சுவினி, பரணி

**மீனம்:** எதிர்பார்ப்புக்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மேடம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் நிதானம் தேவை, பிரயாண பயமுண்டு.

**இடபம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், சுறுசுறுப்புடன் செயற்பட்டு காரியங்களை சாதிப்பீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்:** நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.

**மகரம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்புகள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** வாக்கு மேன்மையுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி:** உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

# 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
18
-
02
-
1969



மறைவு
07
-
03
-
2018

## திருமதி தயாளன் ரூபாவதி (சாந்தி)

கடந்த 07.03.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு திருமதி **தயாளன்** ரூபாவதி (சாந்தி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.04.2018) வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும்.

அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: தயவு செய்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.
தொ.பே:077 652 9017

(C-2124)

தகவல்: இ.தயாளன் (கணவர்)
ராஜன் வீடியோ, ராஜன் என்ரபிறைஸ்
பருத்தித்துறை.

## வாக்களித்திருந்...

திருந்தால் முடிவு வேறுமாதிரி அமைந்திருக்கும். ஆனாலும் கூட்டு எதிரணிக்கு இது பெரு வெற்றியாகும் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கூட்டு எதிரணியால் கொண்டு வரப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் கருத்து வெளியிடும்போதே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, கூட்டு எதிரணி, சுதந்திரக் கட்சி மற்றும் ஜேவிபி ஆகியவற்றின் ஒட்டு மொத்த உறுப்பினர்கள் வாக்களித்தாலும் 103 வாக்குகளே கிடைக்கும். எனினும் பிரேரணைக்கு எதிராக 122 வாக்குகள் பதிவாகின என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.02.2018 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் சுப்பிரமணியம் சின்னத்தங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.04.2018) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிரியைகள் 07.04.2018 சனிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலிநகர், வவுனிக்குளம்.
தொ.பே.இல: 077 068 7673

(சி-2114)

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கதிரிப்பிள்ளை இராசரத்தினம்

### (A.K.R லொறி உரிமையாளர்)

பிறப்பு
12.04.1950


இறப்பு
03.04.2018

*யாழ்.ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா கற்குழியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை இராசரத்தினம் (A.K.R) கடந்த 03.04.2018 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - செல்வநாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ராகுலன் (பாபு - பிரான்ஸ்), காலஞ்சென்ற கோகுலன் (கோபு), தமிழினி (சுவிஸ்), வேனிலன் (வேனு - பிரான்ஸ்), நிரோஜினி (மொறட்டுவ பல்கலைக்கழக மாணவி - இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம், சிவலிங்கம், நடராஜா, காலஞ்சென்ற துரைசிங்கம் (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வள்ளிப்பிள்ளை, ஜெயராணி, ருக்மணி, செல்வகுமாரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காயத்திரி (பிரான்ஸ்), கேசவன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனுஷா, திஷான் (பிரான்ஸ்), ஆருஜன், அகர்ணன், ஆதின் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்..ஆதிமயிலிட்டி KKS VC Road என்னும் நிரந்தர முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (05.04.2018) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மயிலிட்டி கொட்டிப்புலம் இந்து மயானத்தில் பி.ப 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*



VC றோட்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை.

(3519)

தகவல்: குடும்பத்தினர்
தீபன் (பெறாமகன்) - பிரான்ஸ் +33781122309, சுயன் (பெறாமகன்) - இலங்கை +94771546763
சிவபாலன் (பாலன்) - இலங்கை +94767247671



# புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் நூதன பஞ்சதள இராஜகோபுர பஞ்சகுண்ட கும்பாபிஷேக விஞ்ஞானம்- 05.04.2018

### ஆசிச் செய்தி

இயற்கை அழகும் எழில்மிகு வளமும் நிறைந்த நகரமாகிய புதுக்குடியிருப்பில் அமையப் பெற்றிருக்கும் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் முருகப்பெருமானின் அருட்கடாச்சத்தினாலும் புதுக்குடியிருப்பு வாழ் அன்பர்கள் மஞ்சம் வெளிநாட்டு அன்பர்களின் பேருதவியினாலும் ஆலய நிர்வாக சபை உறுப் பினர்களின் அயராத முயற்சியினாலும் இன்று இவ்வாலயத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன் இராஜ கோபுரம் அமையப்பெற்று கும்பாவிஷேகம் காண இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கும்பாவிஷேகம் சிறப்பாக நடைபெற எனது நல்லா சியை வழுங்குகின்றேன்.

**சிவஸ்ரீ.ஜேகா. செந்தில் நாதகுருக்கள்**
**பிரதம குரு**
**புது. ஸ்ரீ. கந்தசுவாமி கோவில்**

### வாழ்த்து செய்தி

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற சிவாகம விதிகளுக்கேற்ப புதுக்குடியிருப்பு வாழ் மக்களுக்கு கோபுர தரிசனத்திற்கும் மக்களின் கோடி புண்ணிய பாக்கியத்திற்கும் காரணகாரியமாக முருக கோபுர பிறப்பினை வாழ்துவதில் பெருமையடைகின் றேன். இது முருகன் எனக்கு கொடுத்த வரமாகவும் உணர்கின்றேன். வரலாற்று புகழ் கொண்ட முருகன் வள்ளி தெய்வானை சமேதரராய் வீற்றிருக்கும் புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவில் இன்றுடன் மேலும் பொலிவுறுகிறது. பத்தர்களின் மனங்கள் பக்தி யில் நிறைகின்றது. சூழவுள்ள வீதியால் பவனிப்பவர் மற்றும் ஆலயம் சூழும் பக்தர்களின் முருகா என்ற ஓலம் வானைத்தொடும் புலனையடக்கி புண்ணிய னாரை மனங்கள் நினைக்கும். இத்தனைக்கும் நிமிர்ந்து நிற்கும் கோபுர தரிசனமே காரணமென நினைக்கும் வேளை என் மேனியும் சிலிர்க்கிறது. உச்சத்தில் ஏறி நிற்கும் முருகன் ஊரெல்லாவற்றையும் பாப்பான். சரி பிழைகளை அறிவான். தன்னருளை நிதம் பொழிவான். மக்கள் பற்பல சௌபாக்கியங்களை பெறுவார்கள். ஆறம் மீண்டும் புலரும் ஆன்மாக்கள் லயப்படுவார்கள். பாவங்கள் மறையும் நீதி தழைக்கும் என்று வேண்டி வாழ்த்துவதில் மிகமிக பூரிப்படை கின்றேன்.

"எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதன்றி வேறொன்றும் அறியேன் பராபரனே" என்ற தாயுமான வரின் கூற்றுக்கு இணங்க கோபுர தரிசனத்தின் ஊடாக அனைவரும் கோடி புண்ணியம் பெற எம் முருகன் பேரருள் கிடைக்கும் என கூறி இந்நாளில் எனது நல் வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்

"தர்மமும் அறமும் பெருக
அன்பும் அகிம்சையும் மலர
குறை தீர்க்கும் குமரன்
குறை வில்லாது அருள்வார் ஆக"

**பி. சுதாகரன்**
**செயலாளர்**
**புதுக்குடியிருப்பு அருள்மிகு கந்தசுவாமி கோவில் பரிபாலனசபை.**

### வாழ்த்துச் செய்தி

இயற்கை அழகும் பசுமையான வயற்பொலிவும் அன்பும் அறிவும் உள்ள பெரும் மக்களும் நிறைந்த புதுக்குடியிருப்பு"எனும் புராதனமான நகரில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் கந்தசுவாமிப் பெருமானுக்கு புதிதாக பஞ்சதள இராஜகோபுரம் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது அனைவருக்கும் அருள் தரும் புனித பணியாகும். போதாப்புனை முடிவு என்னாப் பொருள்முடிவே எனும் தத்துவ நிலையே ஓங்கி வளர்ந்த கோபுர வடிவமாகும். ஆழ்ந்து அகன்று நுண்ணியமான இறைமையின் தோற்ற உணர்வை எமக்குத் தெரிவித்து வாழ்க்கையின் உயர்வு இறையருள் துணையே என காட்டி இயற்கை நலன்களை பூமிக்கு ஈர்த்து பாதிக்கும் கதிரலைகளை தடுத்த காப்பாற்றி நிற்கும் கோபுர தரிசனம் ஸ்தூலலிங்க வழிபாடாகும். இந்தப் புனித கைங்கரியத்தை சிறப்பாக ஆற்றிய பரிபாலன சபையினர் உள்நாட்டு வெளிநாட்டு முருகன் அடியவர் கும்பாபிஷேக தர்சனம் காணும் அன்பர்களும் முருகன் அருள்பாலித்து சகல சிறப்புக்களும் பெற நல்லாசிகள் தெரிவிக்கின்றோம்.

**பிரதிஷ்டா பிரதமகுரு**
**முத்தமிழ் குருமணி கிரியாகிரமஜோதி கலாநிதி சிவஸ்ரீ. நாகேஸ்வரக் குருக்கள்**
**கதிரமலை சிவன்கோவில், சுன்னாகம்.**

### ஸ்தபதி K.புருசோத்தமன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் வன்னிப் பிராந்தியத்துக்குள் புதுக் குடியிருப்பில் அமைந்துள்ள முருகப்பெருமானுக்கு இராஜகோபுரத் திருத்தப் பணியை செய்வதற்கு கிடைத் தமை நான் செய்த புண்ணியமாகும். இவ்வூர் மக்களின தும், ஆலய பரிபாலன சபையினர்களும் வழங்கிய பூரண ஒத்துழைப்பால் திருப்பணிச றப்பாக நிறைவு பெற்றுள்ளது. எல்லா அடியார்களுக்கும் முருகப்பெருமானின் திருவருள் கிட்டி இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது முருகப்பெரு மானின் அருட்செயலாகும். எல்லோரும் நல்லருள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறேன்.

**K.புருசோத்தமன்**
**ஸ்தபதி, தமிழ்நாடு.**

### பொருளாரின் வாழ்த்துச் செய்தி

வன்னிவள நாட்டில் உள்ள சைவ ஆலயங்களில் புதுக் குடியிருப்பு கந்தசுவாமி கோவில் ஆகம முறைப்படி அமை ந்த சிறப்பான ஆலயமாகும். இப் பிரதேசத்தில் உள்ள ஆறுமுகப் பெருமானுக்கு சிறப்பான கோபுரம் சிறப்புற அமைந்திருப்பது எம்மவர்கள் எல்லோருக்கும் பேரானந்தம் தருகின்றது. நாம் எல்லோரும் கோபுரத்தை வழிபட்டு அருள் பெற பெரும் புண்ணியம் பெற்றவர்கள் ஆகின்றோம்.

இந்த வரலாற்றுப் பணியை நிறைவேற்ற உதவிய உள்நாட்டு, வெளிநாட்டு முருக பக்தர்களுக்கும் அழகன் முருனின் இராஜகோபுரத்தை அழகுற வடிவமைத்து தந்த ஸ்தபதி K.புருசோத்தமன் அவர்களுக்கும் முருகப் பெருமான் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**"வடிவேலும் மயிலும் துணை"**
**ப.தெய்வேந்திரம்**
**பொருளாளர், ஆலய பரிபாலன சபை.**

### சைவ அருள் நெறிக்கழகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இந்துமா கடலின் முத்தாம் இலங்கைத் திருநாட்டின் வடபால் வளங்கள் நிறைந்த வன்னிப் பிரதேசத்தின் முல்லை மண்ணில் புதுக்குடியிருப்பு நகரின் கண்ணே பழமையும் புதுமையும் வாய்ந்த எம்பெருமானின் ஆலயம் போர்ச்சூழலின் பின் மிக விரைவாக வளர்ச்சி கண்டு புதுப் பொலிவுபெற்று இன்று பஞ்சதள இராஜ கோபுரத்தின் கும்பாபிஷேகம் காண்பதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

இந்த அளப்பெரும் திருப்பணிக்காக உழைத்த ஆலய பரிபாலன சபையினர், சைவ அருள்நெறிக் கழகத்தினர், வெளி நாட்டு, உள்நாட்டு உறவுகள், ஊர் மக்கள் ஆகியோ ரின் உழைப்பால் புதுக்குடியிருப்பில் முதலாவது இராஜ கோபுரம் எனும் புகழ்பெற்று இவ்வூரில் உள்ள மக்கள் அனைவரும் கோபுர தரிசனம் பெற்று இந்த மண்ணில் நல்லெண்ணம் வாழ வழி அமைத்துள்ளார். இந்த கிடைத்தற்கு அரிதான பணிக்காக தோளோடு தோள் நின்று உழைத்த அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு முருகப்பெருமானின் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**"கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்"**
**த.குறிஞ்சிக்குமரன், தலைவர்.**
**சைவ அருள்நெறிக் கழகம்.**

### வாழ்த்துச் செய்தி

எமது மாவட்டத்தின் பிரசித்தமான இந்து ஆலயங்களில் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயமும் ஒன்றாகும். பிரதேச மக்களுக்கு ஆன்மீகத்தினூடாக ஒழுக்க நெறியினை போதிக் கின்ற பெரும் பணியினை இந்த ஆலயம் மேற்கொண்டு வரு கின்றது. இத்தகைய ஆலயத்தின் இராஜகோபுர கும்பாபிஷேகம் எதிர்வரும் 05.04.2018 அன்று நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். ஆலய பரிபாலன சபையினர், பிரதேச மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பினால் இன்று இப் பணி கைகூடியுள்ளது.

இப் பணியில் உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. ரூபவதி கேதீஸ்வரன்.**
**மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு.**

**ஆலய பரிபாலன சபையினர்**
**அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில்,**
**மு/புதுக்குடியிருப்பு.**

### வாழ்த்துச் செய்தி

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற சிவாகம விதிகளுக்கேற்ப புதுக் குடியிருப்பு வாழ் மக்களுக்கு கோபுர தரிசனத்தையும் மக்களின் கோடி புண்ணிய பாக்கியத்திற்கும் காரணகாரியமாக முருக கோபுர பிறப்பினை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். இது முருகன் எனக்கு கொடுத்த வரமாகவும் உணர்கின்றேன். வரலாற்று புகழ் கொண்ட முருகன் வள்ளி தெய்வானை சமேதரராய் வீற்றிருக்கும் புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவில் இன்றுடன் மேலும் பொலிவுறுகிறது. பக்தர்களின் மனங்கள் பக்தியில் நிறை கின்றது சூழ உள்ள வீதியால் பவனிப்பவர் மற்றும் ஆலயம் சூழும் பக்தர்களின் முருகா என்ற ஓலம் வானைத்தொடும் புலனையடக்கி புண்ணியனாரை மனங்கள் நினைக்கும் இத்தனைக்கும் நிமிர்ந்து நிற்கும் கோபுர தரிசனமே காரணமென நினைக்கும் வேளை என் மேனியும் சிலிர்க்கிறது உச்சத்தில் ஏறிநிற்கும் முருகன் ஊரெல்லாவற்றையும் பார்ப்பார் சரிபிழைகளை அறிவான். தன்னருளை நிதம் பொழிவான். மக்கள் பற்பல சௌபாக்கியங்களை பெறுவார்கள். ஆறும் மீண்டும் புலரும் ஆன்மாக்கள் லயப்படுவார்கள். பாவங்கள் மறையும் நீதி தழைக்கும் என்று வேண்டி வாழ்த்துவதில் மிகமிக பூரிப்படைகின்றேன்.

**ம.பிரதீபன் - பிரதேச செயலர், புதுக்குடியிருப்பு**

### ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

சிவபூமியாகிய இலங்கையின் வடபால் முல்லைத் தீவின் புதுக்குடியிருப்பு என்னும் புண்ணியபதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் முருகப் பெருமானின் ஆலயம் அழகிய சிற்பக் கலையோடு காட்சி தருகின்றது. இவ்வாலயத்தின் இராஜகோபுரத் திருப்பணி நிறைவுபெற்று இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் முக்கியமான வரலாற்று நிகழ்வாகும். இந்த இராஜகோபுர திருப்பணி எமது உள்நாட்டில் உள்ள முருக பத்தர்களும் வெளிநாடுகளில் உள்ள முருகன் அடியார்களும் அள்ளி வழங்கிய நிதி உதவியாலும் அயராத உழைப்பாலும் நிறைவு பெற்றுள்ளது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கு இணங்க கோபுர தரிசனத்தை அடியார்கள் பெறும் வகையில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது முருகப்பெரு மானின் திருவருளினால் ஆகும்.

இவ்வழகிய இராஜகோபுரத்தை ஆகம விதிமுறைப்படி அழகுற வடிவமைத்த இந்திய தமிழ்நாடு சிற்பக் கலைஞர் ஸ்தபதி K.புருசோத்தமன் அவர்களுக்கு இதயம் நிறைந்த நன்றிகளைக் கூறுவதோடு முருகப் பெருமான் அவருக்கு நல் உடல் வலிமையையும், நீண்ட ஆயுளை யும் கொடுத்து தொடர்ந்து அவர் பணிசிறக்க வாழ்த்துகின்றோம். நிறைவாக இவ்வரலாற்றுத் திருப்பணி சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் முருகப்பெருமானின் பேரருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**சி.ஏகாம்பரம் - தலைவர், ஆலய பரிபாலனசபை.**

### லண்டன் நிதிக்குழுவினரின் வாழ்த்துச் செய்தி

ஆறுமுகப் பெருமானுக்கு அழகிய இராஜகோபுரம் அமைந்திருப்பது எம் இதயத்தை நிறைந்திருக்கின்றது. எம் மக்கள், எம் உறவுகள் கோபுர தரிசனம் பெற்று புண்ணியம் பெற்றவர்கள். இத்திருப்பணிக்காக நிதிசேகரிப்பில் நாம் ஈடுபட்டபோது எமக்கும் ஆக்கமும், ஊக்கமும் தந்து பெருமனத்தோடு நிதி உதவி வழங்கிய அனைத்து முருகப்பெருமான் அடியார்களுக்கும் எம்பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக் கின்றோம். ஊர் மக்களும் ஆலய பரிபாலன சபை யினரினதும் பெருமுயற்சியால் இப்புண்ணிய பணி நிறைவுபெற்று இன்று குடமுழுக்கு நடை பெறுவது நாம் செய்த பாக்கி யமாகும். இவ் உன்னதமான திருப்பணிக்கு உதவிய அனை வருக்கும் எம்பெருமானின் அருள்வேண்டிப் பிரார்த்திக் கின்றோம்.

**நிதிக்குழு, லண்டன்.**

### வாழ்த்துச் செய்தி

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆகம விதிமுறைகளிற்கு அமைவாக அமையப் பெற்ற ஆலயமாக விளங்கும் கந்தசுவாமி ஆலயம் கடந்த காலங்களில் வேகமாகவும் நேர்த்தியாகவும் சிற்பவேலைப்பாட்டுடனும் பல கோடி ரூபா நிதிமூலம் புனரமைக் கப்பட்டு கும்பாபிஷேகம் நடை பெறுவதை இட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். புலப் பெயர்வுக்கு முந்திய ஆண்டின் மூலப்பொருட்கள் அதிசுவடிய விலையில் கிடைக்கப் பெற்ற போது கூட இவ்வாலயம் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஆகையால் இறுதி யுத்தத்தின் போது ஆலயம் முழுமையாக அழிவடைந்த நிலையில் பார்த்த போது வேதனை தருவதாக அமைந்திருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் முழுமையாக சேதமடைந்த ஆலயமாக இவ்வாலயமே கொள்ளப் பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை.

தற்போது இராஜகோபுரம் சுற்றுக் கொட்டாக சிறப்பான முறையில் அமையப்பெற்றிருப்பதும் சிற்ப வேலைப்பாடுகள் உரிய வர்ண அலங்காரங்கள் கொண்டு மனதை மகிழ்விக்கும் முறையில் அமையப் பெற்றிருப்பதோடு இவ்வாறான அமைப்பினைக் கொண்ட முருகன் ஆலயம் வேறு எதுவும் எமது மாவட்டத்தில் அமையப் பெறவில்லை என்பதும் நோக்கத்தக்கதொன்றாகும்.

பல கோடி நிதி புதவியினை வாரி வழங்கிய புலம்பெயர் நாடுகளிலும் மற்றும் உள்ளூர் பக்தர்களுக்கும் இவ்வாலய புனரமைப்பில் அதிகமான பங்குண்டு. அவர்களின் ஆத்மீகப் பணிக்கு முருகனின் அருட்கடாட்சம் என்றென்றும் இருக்கும் என்பது உண்மை. புலம் பெயர்விற்கு முன்னைய காலங்களில் ஆலயப்பூசைகளை மற்றும் உற்சவங்களை நடாத்தி வந்த குருக்கள் புலம்பெயர்வின்பின் மாதம்பை முருகனின் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் மீண்டும் இவ் வாலயத்திற்கு வருகை தந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.

இந்து சமயநிறுவனத்தினையும் அறநெறிப் பாடசாலையினையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பத்திலிருந்து சிறந்த முறையில் நடாத்தி வந்துள்ளார். தொடர்ந்தும் சிறந்த முறையில் அவற்றை தொடர வேண்டும் என்று இம்மலரின் ஊடாக கேட்டுக்கொள்வதோடு கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறவும் மலர் சிறப்புற வெளி வரவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

**சி.மோகனராசா - இந்து கலாசார உத்தியோகத்தர்.**

# தைரொட்சைட் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை உபகரணத்தைப் பெற்றுக் கொடுக்க முன்வாருங்கள்

## நன்கொடையாளர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தைரொட்சைட் நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான உபகரணம் தேவையாக இருப்பதால் அந்த உபகரணத்தினைப் பெற்றுக்கொடுக்க செல்வந்தர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் முன்வர வேண்டுமென யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி. சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் 2 சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இலங்கையில் இரண்டாவது தடவையாக இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தைரொட்சைட் சுரப்பிக்கான சத்திரசிகிச்சை கழுத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு அகற்றப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது வாய்ப்பகுதியினால் தைரொட்சைட் அகற்றப்படுகின்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 2 தைரொட்சைட் சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. அந்த சத்திர சிகிச்சைகளின் பின்னர் வவுனியா மற்றும் மன்னார், திருகோணமலை உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் தைரொட்சைட் நோயாளர்கள் சத்திர சிகிச்சைக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளார்கள். பாங்கொக்கில் பேராசிரியர் ஜங்குனால் முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டு அங்கு பயிற்சி பெற்று இந்த தைரொட்சை சத்திர சிகிச்சையினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம்.

கொரிய நாடுகளில் சத்திர சிகிச்சை மேற்கொண்டதன் பின்னர் 3 மணித்தியாலயங்களில் வீட்டிற்கு அனுப்பப்படுகின்றார்கள். யாழ். போதனா வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வசதிகள் இன்மையால் நோயாளர்களை நீண்ட நாட்களுக்குப் பராமரிக்க வேண்டிய தேவையுள்ளது. சென்றி மீற்றர் நீளமுடைய கட்டிகளையே அகற்ற முடியும். மிகப்பெரிய கட்டிகளை இந்த சத்திரசிகிச்சை மூலம் அகற்ற முடியாது. யாழ். போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரையில் காது. மூக்குத் தொண்டைப் பிரிவு மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரையில் பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் தேவைப்படுகின்றன. அவற்றினை செல்வந்தர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் தந்து உதவ முன்வர வேண்டும். அவ்வாறு முன்வந்தால் தைரொட்சைட் சத்திரசிகிச்சையினை மிகச் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வாழ்வாதாரக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் இணைக்கசபை உறுப்பினர் ஞா. லூயிஸ் அன்ரனி தலைமையில் அண்மையில் வழங்கப்பட்டன. கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இவ்வுதவிகள் யாவும் முன்னுரிமை அடிப்படையில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தேர்ந்தெடுத்து வழங்கப்படுகின்றன எனவும் பலெர்மோ இத்தாலிய உறவுகளின் நிதி அனுசரணையுடன் இவை வழங்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)






இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் பத்தாவது குருதிக்கொடை முகாமும் கொடையாளர்கள் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றது.

## க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்-2017

யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

ஜே.வைஸ்ணவி-8ஏபி. எஸ்.பிருந்தாதரன்-8ஏஎஸ். எஸ். விதுசன்-8ஏஎஸ். ரி.சுகன்யா-6ஏ2பிசி. ஏ.திவ்யா-6ஏபிசிஎஸ்.ஜெ.அலெக்சனா-6ஏபிசிஎஸ். பி.கோகுல்ராஜ்-5ஏ3பிசி. பி.சுரேகா- 5ஏபி3சி. பி.கிருத்திகா- 5ஏபி2சி எஸ். ரி.யதுசா- 4ஏ4பிஎஸ். வி. பிந்துஜன்-4ஏபி2சி, எஸ். தேனுஜன்-4ஏ2பி3எஸ். கே. அஜித்தன்-4ஏ2பி2சி, பி. சங்கீர்த்தனன்- 3ஏ2 பி3சி. ஆர். வைஸ்ணவி-3ஏபி3சிஎஸ். யு.பிரதீபன்- 2ஏ4பி2சி, ஜெ.அபிஷாளினி - 2ஏ3பி 2சிஎஸ்.

யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

தமிழ்மொழி மூலம்

யு.அபிஷா-9ஏ,ஏ.மைக்கலினா-9ஏ,ஏ.டிலக்ஷனா-9ஏ. எல்.அம்பிகா-9ஏ, சி.சதுரியா-9ஏ,எஸ்.கீரன்சாமா-9ஏ, கே.பானுஜா-9ஏ,என். கிருஸ்திகா-9ஏ, ஆர். ஏஞ்ஜலின்-8ஏ. எஸ்.அபிநயா-8ஏ- கே.எழில்நிலா-8ஏ, ஏ.றிஷாளினி-8ஏ. எஸ். சிந்துாரி-8ஏ- கே.பிறிஸ்சிலா சிறோமி-8ஏ, எஸ்.சுமிலா-8ஏ,கே. யனுஷா-8ஏ. வை.நிம்சியா-8ஏ, கே. சாருஜா-7ஏ. சி. சுசானா-7ஏ, எம். நிசாந்தினி -7ஏ. ரி.சாமந்தி-7ஏ. எஸ் அஸ்வினி-7ஏ. எல். கோபிகா -7ஏ. ஆர்.சுங்கவி-7ஏ, ரி.பிரியங்கா-7ஏ, ஜே. நியோமியோனா-7ஏ

ஆங்கில மொழிமூலம்

எம்.அமுதவல்லி-9ஏ. ஜே. ரபிதா ஜரீன். 9ஏ. என். நியூரா-8ஏ.ஆர். பிரவிலசா-8ஏ. எம். ஆரபி-8ஏ.எம். ஜதுஷா-8ஏ. ஜே. இவாஞ்சலின் சுஜந்திகா- 7ஏ. ஜீ. கீர்த்தனா-7ஏ.

யா/சந்திரமௌலீச வித்தியாலயம்

வி. பிரியங்கா-9ஏ, பி.பவிநயா- 8ஏபி, கே. தமிழ்ப்பிரியா- 8ஏசி, ஜே.கோபிஷன்-7ஏபிசி, பி.சௌமியா-7ஏபிசி, என்.ரம்யா-3ஏ4பிசிஎஸ், எஸ்.கயல்விழி-3ஏ3பி2சி, ஆர்.திலக்சன்-2ஏ4பி3சி, எஸ்.தனுசன்-ஏ3பி2சிஎஸ், ரி.தமிழ்க்கவிஞன்-ஏபி4சி2எஸ், பி.கஜிந்தன்-3பி2சி2எஸ்., எஸ்.துஷாந்தன்-2பி5சிஎஸ், என். தமிழ் அறிஞன்-பி3சி3எஸ், கே. டிலக்சன்-6சி2எஸ்.

யா/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை

ஜே.அரவிந்தி-7ஏபிசி, யு.பபிதா-7ஏபிசி. கே. கிருசாயினி-4ஏ2பி3சிஎஸ்,எஸ். தமிழினி-5பி2சி2எஸ், எஸ். விஜிதா-3ஏ2பி2சிஎஸ், ஜெ. ஹஜீந்தினி-2ஏ4பி2சி, ஜே. யசோதை-ஏ2பி3சி2எஸ், கே.கிருசனா-ஏ2பி2சி3எஸ், கே.டினோஜா-3பி2சி3எஸ், எஸ்.மதுசாயினி-3பிசி3எஸ், பி.பிரதீபன்- பி3சி4எஸ், வி. எழில்மதி- பி3சி4எஸ், எஸ். குணசாந்- பி6எஸ், ஐ.சுஞ்சய்-4சி3எஸ்.எம்.மதுராம்-3சி4எஸ்.

## ஸ்ரீமத் பகவத்கீதை விளக்கவுரை அர்ஜுன விஷாத யோகம் பகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன், சுவாமி சிதாகாசானந்தாவால் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில், ஸ்ரீமத் பகவத் கீதை விளக்கவுரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை, யாழ்.சின்மயா மிஷன், இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் முகவரியில் நடைபெறுகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை ஸ்ரீமத் பகவத்கீதையின் முதலாம் அத்தியாய விரிவுரை இடம்பெறும்.

ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அனுமதி இலவசம். (இ-7)

## நூல்.வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கம் எழுதிய சமகாலத்தில் சர்வதேசம் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகரசபை முன்னாள் பிரதம சுகாதார பரிசோதகர் பொ.ஜெயநாதன் தலைமையில் இடம்பெறும். (இ-7)

## அபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

புங்கன்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அபிஷேக விஞ்ஞாபனம் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து 12 தினங்களுக்கு தினமும் முற்பகல் 10 மணியளவில் விசேட ஆராதனை இடம்பெற்று எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அம்பாளுக்கு விசேட ஆராதனை இடம்பெறும். (இ)

## இலத்திரனியல் பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசப் பயிற்சி நெறிகளுக்கு கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தினால் பயனாளிகள் பதிவு செய்யப் படவுள்ளனர்.

CCTV கமரா installation,LED Panel வடிவமைப்பு, Sensor Devices வடிவமைப்பு, Graphic Desinging, Website Designing, JavaProgramming Language, கணனி Hardware

இப்பயிற்சி நெறிகளில் பங்குகொள்ள விரும்புபவர்கள் 05.04.2018 கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென கரவெட்டி பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 021 226 4958/ 077 746 6067/ 077 186 9015 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் என கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)



யாழ்.நாகர்கோவில் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் வி.சிவசங்கர் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க.பத்மநாதன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

# புத்தாண்டு சுபநேர அட்டவணை ஜனாதிபதியிடம் கையளிப்பு



சிங்கள, தமிழ் புத்தாண்டுக்கான சுபநேர அட்டவணை சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

உள்நாட்டலுவல்கள், வடமேல் அபிவிருத்தி, கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன இந்த சுபநேர அட்டவணையை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

புண்ணிய காலங்களான புதுவருடப் பிறப்பு, உணவு சமைத்தல், மற்றும் உணவு அருந்துதல், தலைக்கு எண்ணெய்தேய்த்தல், தொழிலுக்குச் செல்லுதல் போன்ற சுப நேரங்கள்இந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் உள்நாட்டலுவல்கள், வடமேல் அபிவிருத்தி கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி சுவர்ணபால, ஆலோசகர் ரவி பந்து வித்தியாபதி, பணிப்பாளர் அநுஷா கோக்குல ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# கட்டடத் திறப்பு விழா பிற்போடல்

சாவகச்சேரி கலாசார மத்திய நிலைய கட்டடத் திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இக் கட்டடத் திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி.தி.தேவநந்தினி பாபு தெரிவித்துள்ளார். (இ-7)


## விற்பனைக்கு

பாவித்த மோட்டார் சைக்கிள்கள் (Bajaj-Discover 125,Bajaj-CT 100)விற்பனைக்குண்டு. (3515)

18/10,வைமன் வீதி, நல்லூர். தொ.பே 077 224 2394

## களப்பணியாளர் பதவி

களப்பணியாளராகக் குறைந்தது 3 வருடம் பணியாற்றிய அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
E-mail:senthu@eureka.lk

SOND:18/10 Wymen Road, Nallur. T.P No:077 224 2394 (3515)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulation



28.03.2018 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலையின் ஆசிரியர்களான குமாரசாமி கிருபாகரமூர்த்தி கல்விமாணி விஞ்ஞானம் B.Ed(Sc) மற்றும் இராசலிங்கம் இளங்கோ கல்விமாணி ஆரம்பக்கல்வி B.Ed(2nd class lower) ஆகிய பட்டங்களைப் பெற்ற இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு மென்மேலும் உயர்வு பெற மனதார வாழ்த்துகின்றோம்.



குமாரசாமி கிருபாகரமூர்த்தி B.Ed(Sc)

இராசலிங்கம் இளங்கோ B.Ed(2nd class lower)

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்,
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம், புத்தூர். (சி-2116)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2017ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள்



பா.பாத்திமா நிஹ்லா-8ஏ எஸ்



ச.டிசாந்தன்-7ஏ பி எஸ்



ச.துசியந்தன்-4ஏ 3பி சி

மேலும் 25 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.
இவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம், மு/முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை. (3499)

## மனமார வாழ்த்துகின்றோம்

### திருமதி. அமுதினி சாந்தகிரிநாதன்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி. அமுதினி சாந்தகிரிநாதன் அவர்கள் கடந்த 28.03.2018 புதன் கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்விமாணி (B.Ed) பட்டம் பெற்றமையையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் மேலும் உயர்வு பெற பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம் (3514)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.கனகசுகிஜா ரவிச்செல்வன்
SLTS 2-I Pri Trd, B.Ed



செல்வி.பவானி செல்லத்துரை
SLTS 2-I Pri Trd, B.Ed

28.03.2018 அன்று தேசிய கல்வி ந்றுவகத்தால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். ([illegible])

ஆசிரிய நலன்புரிச் சங்கம்,
யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கணனி தமிழ் டைப்பிங்
★ கணனி பக்க வடிவமைப்பு
★ விளம்பர வடிவமைப்பு

முன் அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் தேவை.
பெண்கள் (பகல் கடமை), ஆண்கள் (இரவுக்கடமை) தகைமை உள்ளவர்களும் பயிற்சி பெற விரும்புபவர்களும் 06.04.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

- பொது முகாமையாளர்

வலம்புரி
இல.03, 02-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

### கிளிநொச்சியில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற

# பொருளாதார ஊக்குவிப்பு திட்டங்களை சந்திரிகா நேரில் சென்று பார்வையிட்டார்

(கண்டாவளை)

கிளிநொச்சி வட்டக்கச்சி, மாயவனூர் கிராமத்தில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களினால் கிளிநொச்சியில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றங்களை முன்னாள் ஜனாதிபதியும் தேசிய நல்லிணக்க செயலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இத் திட்டங்களினூடாக 72 பயனாளிகளுக்கு விவசாயக் கிணறுகள் அமைக்க 7.86 மில்லியன் ரூபாவும், 175 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட செய்கைக்கு 12.75 மில்லியன் ரூபாவும் , 7 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பிற்கு 0.35 மில்லியன் ரூபாவும், 17 பயனாளிகளுக்கு மாடு வளர்ப்பிற்கு 1.7 மில்லியன் ரூபாவும் , கோழி வளர்ப்பிற்கு 0.3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.



இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 62 பயனாளிகளுக்கு விவசாயக் கிணறுகள் அமைக்க 9.56 மில்லியன் ரூபாவும், 141 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டம் செய்கைக்கு 8.6 மில்லியன் ரூபாவும், 25 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பிற்கு 1.25 மில்லியன் ரூபாவும், 38 பயனாளிகளுக்கு மாடு வளர்ப்பிற்கு 3.68 மில்லியன் ரூபாவும், 27 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பிற்கு 1.35 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டங்கள் அனைத்தும் கடந்த 2017 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டவையாகும்.

இந் நிகழ்வில் மாகாண திணைக்கள அதிகாரிகளுடன் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# வவு-பூந்தோட்டம் மகாவித்தி —கட்டடத்திறப்பு விழா—





வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலய கட்டடத் திறப்பு விழா நேற்று இடம் பெற்றது.

வடக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட இக் கட்டட திறப்பு விழா அதிபர் திருமதி கி.நந்தபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றம் இளைஞர் விவகார அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரனால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டது. மேலும் பாடசாலை மாணவர்களினால் கலை நிகழ்வும் இடம் பெற்றிருந்தது.

வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தின் நீண்ட கால பிரச்சனைக்கு ஒரு தீர்வாக அமைந்த இந்நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வவுனியா கோட்டக்கல்விப்பணிப்பாளர் எம்.பி.நடராஜா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

வன்னி வலம்

### 'போதையிலிருந்து விடுபட்ட வன்னி'

# போதை தவிர்ப்பு வேலைத்திட்டம் வவுனியாவில் நேற்று முன்னெடுப்பு

### முறைப்பாட்டு பெட்டிகள் வழங்கி வைப்பு





(குருமன்காடு)

"போதையிலிருந்து விடுபட்ட வன்னி" எனும் தொனிப் பொருளில் வவுனியாவில் போதை தவிர்ப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயல் திட்டமான மது போதைத் தவிர்ப்பு வேலைத்திட்டம் இலங்கையில் முதல் முதலாக வவுனியாவில் வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் காரியலயத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

"போதையிலிருந்து விடுபட்ட வன்னி" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வானது கல்லூரியின் அதிபர் தா. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வவுனியாவிலுள்ள 37 பாடசாலைகளைச் சேர்ந்த சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் 420 பேர் போதை தவிர்ப்பு வேலைத்திட்ட நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததுடன், போதை ப்பொருள் பாவனை தொடர்பாக முறையிடுவதற்கு அல்லது தகவல்களை பொலிசாருக்கு வழங்குவதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் வைப்பதற்காக மாணவர்களிடம் முறைப்பாட்டு பெட்டிகள் பொலிஸாரால் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவிகளின் நடன நிகழ்வுகளும் நடைபெற்றிருந்தன.

மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவின் உதவி ஆய்வாளர் எஸ்.எம். பிரேமரத்தின வளவாளராக கலந்து கொண்டு மது போதை தவிர்ப்பு வேலைத்திட்டம் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்க மளித்திருந்தார்.

விருந்தினர்களாக வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம்.எஸ்.தென்னக் கோன், வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராட்சி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

### கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு

# சொந்தமான காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப தீர்மானம்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்குச் சொந்தமான காணியை மீள இராணுவம் அபகரித்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதங்களை அனுப்புவதாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமான 4 அரை ஏக்கர் காணி கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவத்தினரின் வசமிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து, பாடசாலை நிர்வாகம் தனியார் நிறுவனம் ஒன்றின் நிதி அனுசரணையுடன் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் மைதானத்தை புனரமைப்புச்செய்திருந்தது.

இந்நிலையில் குறித்த மைதானக் காணியை இராணுவம் மீளக் கையப்படுத்தியதுடன், மைதானத்திற்கு செல்கின்ற வீதியையும் முழுமையாக மூடியுள்ளது. இதனையடுத்து, கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்து, கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களில் ஒருவரான, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த விடயம் தொடர்பில் எழுத்து மூலம் அறிவித்து அதற்கான பிரதியை தனக்கு வழங்குமாறும் அண்மையில் தான் இராணுவ அதிகாரியுடன் மேற்கொண்ட சந்திப்பின் போது, இவ்வாறான பிரச்சினைகள் இருப்பினும் தனக்கு அறியத்தருமாறும் இராணுவ அதிகாரி குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கடிதங்களை அனுப்பி தனக்கு ஒரு பிரதியையும் அனுப்பி வைக்குமாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச செயலர் ரி.முகுந்தன் கருத்துத் தெரிவிக்கும் போது, குறித்த காணியை இராணுவம் வைத்துள்ளது என்பதற்கு அப்பால் இரண்டு வகையான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அதாவது, குறித்த காணி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த போது, சர்வதேச விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்குச் சொந்தமான 4 அரை ஏக்கர் காணியினையும் இணைத்து வரைபடத்தை தயாரித்திருக்கின்றனர் எனத் தெரிவித்தார். எது எவ்வாறு இருப்பினும் பாடசாலைக்குரிய காணி விடுவிக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்க வேண்டுமென்றும் அதற்கான பாதையினையும் முழுமையாகத் திறந்துவிட வேண்டுமென்றும் கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல் வாதிகள் தெரிவித்துள்ளதுடன் மேற்படி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. (2-315)

# காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்வு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில், புத்துவெட்டுவான் வீதியின் புகையிரத வீதிக்கும் ஏ-9 வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வனப்பாதுகாப்பிற்குச்சொந்தமானகுறித்த காணிகளில் இவ்வாறான கிரவல் அகழ்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாகவும் கிரவல் அகழ்வில் ஈடுபடுகின்ற கனரக வாகனங்களும் கிரவலைக்கொண்டு செல்கின்ற டிப்பர் வாகனங்களும் கொக்காவில்- ஐயன்கன்குளம் வீதியால் பயணிப்பதனால் வீதிகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

இவ்வாறான கிரவல் அகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்டு காடுகளை மீள்நடுகை செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (2-315)

# சா/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 100 வீதம் சித்தி

(கண்டாவளை)

வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட, உயர்தர வித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த.சா/த.பரீட்சைக்கு கடந்தாண்டில் தோற்றிய மாணவர்கள் 100 வீத சித்தியைப் பெற்றுள்ளனர்.

அண்மையில் வெளியாகிய க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை முடிவுகளுக்கு அமைய கணிதம் உட்பட எட்டுப்பாடங்களில் மாணவர்கள் 100 வீத சித்தியைப் பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கணித பாடத்தில் 100 வீத சித்தி பெற்ற இரண்டு பாடசாலைகளில் இப்பாடசாலை ஒரு பாடசாலையாகக் காணப்படுவதுடன், பரீட்சைக்குத் தோற்றிய 78 வீத மாணவர்கள் க.பொ.த.உயர் தரத்திற்கு தகுதி பெற்றிருப்பதாகவும் அதிபர் கே.பி.கணேஸ் தெரிவித்துள்ளார். (2-315)

## கிளிநொச்சி குளத்திலிருந்து அகழப்படுகின்ற

# மண்ணினால் கரையோர அணைக்கட்டுக்களை அமைத்து எல்லைகளைப் பாதுகாக்க முடியும்

## நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுதாகரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி குளத்தைப் புனரமைப்பதற்கான நிதி கிடைக்கப் பெறவில்லை. இதற்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் இதனை அபிவிருத்தி செய்ய முடியும். அதேவேளை குளத்தின் எல்லைகளை பாதுகாப்பதற்கு குளத்திலிருந்து அகழப்படுகின்ற மண்ணைக் கொண்டு கரையோர அணைக்கட்டுக்களை அமைத்து குளத்தின் எல்லைகளைப் பாதுகாக்க முடியும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 2 ஆம் திகதி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில்நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சிக் குளத்தை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்தே நீர்ப்பாசனப்பொறியியலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி நகரத்தின் மையப்பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய வகையிலும் நகருக்கான நீர்த்தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ள கிளிநொச்சிக்குளத்தின் கரையோரப்பகுதிகள் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் எதிர்காலத்தில் குளம் இல்லாமல்போகின்ற நிலைமை காணப்படுவதாக பல்வேறு தரப்புக்களும் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளன.

அதாவது, கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, ஆகிய பகுதிகளுக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் பூநகரி மற்றும் தட்டுவன்கொட்டிப் பகுதிக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்துகின்ற இக்குளத்தின் இயற்கைத்தன்மையையும் குளத்தையும் பாதுகாக்க உரிய திணைங்களங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நடைபெற்று முடிந்த மேற்படி கூட்டத்திலும் பல்வேறு தரப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, கிளிநொச்சி குளத்தினுடைய கரையோரப் பகுதிகளின் எல்லைகளை வரையறை செய்து குளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அத்தோடு மண் நிரவிக் காணப்படுகின்ற குளத்தினை ஆழப்படுத்தி அதன் இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்குப்பதிலளித்த பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் மேற்கண்டவாறு கூறினார். (2-315)

## நடைபாதை வியாபாரிகளினால் பாதசாரிகளுக்கு அசௌகரியம்



(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரிகளினால் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக, வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில்பாதசாரிகளின்நடைபாதையில் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதனால்பொது மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துவருவதாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி இடத்தில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் நடைபாதையில் நடந்து செல்ல முடியாத வகையில் பொருட்களை பரப்பி வைத்து விற்பனையில் ஈடுபடுவதுடன் நடைபாதையில் நடந்து செல்லும் சமயத்தில் தம்மை பொருட்களை வாங்குமாறு வற்புறுத்துவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று வவுனியா தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் நகரசபையின் கட்டுப்பாட்டை மீறி வீதியில் பொருட்களை வைத்து விற்பனை செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)




## மின்கம்பத்துடன் மோதுண்டு டிப்பர் விபத்துக்குள்ளானது



தாண்டிக்குளத்தில் மின்கம்பத்துடன் மோதி டிப்பர் விபத்துக்குள்ளானது. வவுனியா தாண்டிக்குளத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் டிப்பர் வாகனமொன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. எனினும் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா குருமன்காடு-தாண்டிக்குளம் பிரதான வீதியில் காணப்படும் வாகனம் திருத்தும் இடத்திலிருந்து பின்பக்கமாக வீதிக்கு ஏற முற்பட்ட டிப்பர் வாகனம் வீதியின் அருகே காணப்பட்ட மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது மின்கம்பம் துண்டாகவுடைந்து வீழ்ந்தமையினால் அப் பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது. தற்போது அறுந்த மின்சார வயர்களை சீராக்கும் பணியில் மின்சார சபையினர் ஈடுபட்டு மின்விநியோகம் சீர்செய்யப்பட்டது. (2-281)

## வவுனியாவில் கலை இரவு

(பனிக்கன்குளம்)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி ஒன்றியத்தின் வவுனியா கிளையினால் கலை இரவு நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக குறித்த நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு உறுப்பினரான ப. வைஷ்ணவன் கருத்து தெரிவிக்கையில்,

பல்வேறு துறைகளில் நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். குறிப்பாக பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் கலை தொடர்பான செயற்பாடுகள் கடந்த பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டாலும் கூட கலைச்செயற்பாட்டின் ஊக்குவிப்பை கருத்தில் கொண்டு வவுனியாவில்குறும்பட போட்டி நிகழ்வுகள், பட்டிமன்றம், இசையும் நடனமும் உட்பட பல கலை நிகழ்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

எனவே எதிர்வரும் 8 ஆம் திகதி வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கோருகின்றோம் என அவர் கேட்டுள்ளார். (2-281)



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் வவுனியா ஆங்கில சங்கமும் இணைந்து நடத்தும் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் மொழிபெயர்ப்பில் உருவான சுதந்திரம் - தென்னாசியக் கவிதைகள் (தமிழில்), MY CHOICE - SRILANKA TAMIL POETRY IN ENGLISH ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது...

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

## துப்பாக்கி பறித்த நபர்கள்

# அணி வகுப்பில் அடையாளம் விளக்கமறியல் நீடிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் படையினரின் துப்பாகி பறிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் மாவட்ட நீதிமன்றில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

வழக்கின் முதலாம் மற்றும் இரண்டாம் சாட்சிகளாக படையினர் மற்றும் மூன்றாம் நான்காம் சாட்சிகளான வனவள பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் குறித்த மூவரையும் நீதிபதி முன்னிலையில் அடையாளம் காட்டியுள்ளார்கள். அடையாளம் காணப்பட்ட குறித்த குற்றவாளிகள் மூவரையும் எதிர்வரும் 11.04.2018 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணையினை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி 03.04.2018 அன்று எடுத்துக்கொள்ள உத்தரவிட்டுள்ளார்

இந்நிலையில் படையினரின் துப்பாக்கியை பறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மீது முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்ட குறித்த வழக்கு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின் குமார் தலைமையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் படையினரின் பணிக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் ஆயுதம் பறிக்கப்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மூவரையும் நீதிமன்ற வளாகத்தில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டனர்.

அடையாளம் காணப்பட்ட குறித்த குற்றவாளிகள் மூவரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (2-281)

## கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால்

# கடந்தாண்டில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 175 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடந்த 2017ஆம் ஆண்டில் 175.50 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத்தை விருத்தி செய்யும் வகையில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் பல்வேறு நிதியீட்டங்கள் ஊடாக அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்தாண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைகளத்தினால் வெளியிடப்பட்ட தகவல்களின் படி கமத்தொழில் அமைச்சு, கமநல அபிவிருத்தி திணைக்களம், மீள்குடியேற்ற அமைச்சு, தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சு, உலக உணவுத்திட்டம், உலக உணவு ஸ்தபானம் போன்ற நிதியீட்டங்கள் ஊடாக நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைத்தல், வாய்க்கால்கள் புனரமைத்தல், கமநலசேவை திருத்தம், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் இரண்டாம் கட்ட வேலைகள், கிணறுகள் அமைத்தல், நெல் உலர விடும் தளங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் 175.50 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் காசோலை கையளிப்பும் விழிப்புணர்வும்

(கிளிநொச்சி)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் யாழ், பிராந்திய காரியாலயமானது கடந்த வருடங்களைப் போன்று இவ்வருடமும் பல மானிய மற்றும் கடன் திட்டங்களையும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களையும் வெற்றிகரமாக முன்னகர்த்தி வருகின்றது.

அந்த வகையில் 2017 ஆம் ஆண்டிற்குரிய மானியத் திட்டத்தில் பங்குபற்றியோருக்குரிய காசோலைகள் வழங்கும் நிகழ்வு மற்றும் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு கற்பகதரு சங்கங்களுக்கான சுகாதார மேம்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. (2)

# கலைத்தரிசனம்





## கலாபூஷணம் பொன்னையா சேதுபதி அவர்களுடனான சந்திப்பு

முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் கிராமத்தில் 1939ஆம் ஆண்டு பங்குனி மாதம 29ஆம் திகதி பிறந்த இவர் தனது பன்னிரண்டாவது வயதில் சிவபெருமான் பாத்திரமேற்று நடித்து நாடக உலகிற்குள் கால்பதித்தார். அதனைத் தொடர்ந்து தொபியாஸ், பாவமா? பாசமா? மந்திரியின் சூழ்ச்சி, படித்த முட்டாளே பார், அன்பே சங்கீதம் போன்ற பல நாடகங்களில் நடித்ததோடு தீர்ப்பு, நெஞ்சில் ஒரு முள், சிலை எடுத்த செம்மல், எனக்கா மன்னிப்பு, தாயுள்ளம், அவள் ஒரு கோயில் சிலையானாள் ஆகிய பல நாடகங்களை நெறியாள்கை செய்து அரங்கேற்றியுள்ளார்.

2011இல் கலாபூஷணம் விருதையும் 2012இல் சான்றோர் விருதையும் 2013 இல் ஆளுநர் விருதையும் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பேரவையினால் முல்லைப் பேரொளி என்ற விருதையும் பெற்றார். முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரம்பரியக் கலைகளை அழிய விடாது காத்து வர வேண்டும். அதனை இளம் சமுதாயம் முன்வந்து காக்க வேண்டும் என்பதே இவரின் இறுதி ஆசை என்று குறிப்பிடுகின்றார். 1956 ஆம் ஆண்டுகளில் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். 79 வயதிலும் சோர்வின்றி துவிச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்று கலை சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். பல்துறை ஆளுமை கொண்ட கலாபூஷணம் பொன்னையா சேதுபதி தன்னைப் பற்றியும் தன் கலைப்பணியைப் பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய செவ்வி பிரசுரமாகிறது.

**தாங்கள் நாடக உலகிற்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

பாடசாலைக் காலத்தில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டி நாடகத்தில் சிவபெருமான் பாத்திரமேற்று நடித்துப் பாராட்டைப் பெற்றேன். நாடகமும் முதலாமிடத்தைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து பாடசாலை நாட்களில் நடைபெற்ற கலை விழாக்களில் பங்குபற்றி பரிசில்கள் பல பெற்றுள்ளேன்.1956-1957 காலப்பகுதியில் வடமாகாண ரீதியாக நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் மதுவிலக்கு, பாரதியார், செல்வத்துள் செல்வம் கல்வி ஆகிய தலைப்புக்களில் பேசி முதலாமிடத்தைப் பெற்றேன். இவ்வாறுதான் கலையுலகிற்குள் கால் பதித்தேன்.

**நீங்கள் நடித்த நாடகங்கள் பற்றி?**

தொபியாஸ் என்னும் நாடகத்தில் தொபியாஸ் வேடத்தில் நடித்து அக்காலப் பகுதியிலிருந்த கத்தோலிக்க ஆயரினால் சிறந்த நடிகர் எனப் பாராட்டுப் பெற்றேன். பாவமா? பாசமா?, மந்திரியின் சூழ்ச்சி, படித்த முட்டாளே பார், இழப்பு நெஞ்சில் ஒரு முள், மறுமலர்ச்சி, அன்பே சங்கீதம், தீர்ப்பு போன்ற நாடகங்களில் கதாநாயகனாக நடித்தேன். சந்திக்கு இழுப்பேன், நான் சொன்னால் சொன்னது தான், ஆச்சிக்குச் சொல்லாதே, உபத்திரம், இருந்து பாருங்கோ போன்ற பல நகைச்சுவை நாடகங்களிலும் கல்சுமந்த காவலன், பெண்ணின்சீற்றம், பண்டாரவன்னியன், யூலியர்சீசர், சோக்கிரட்டீஸ், ஒதல்லோ ஆகிய சரித்திர நாடகங்களிலும் ஸ்ரீ வள்ளி, காத்தவராயன், நெல்லிமகள் போன்றவற்றிலும் நடித்துள்ளேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற நாடகப் போட்டிகளில் இராமராக நடித்துப் பரிசு பெற்றேன். கோவலன் நாட்டுக்கூத்தில் முல்லை மாவட்டத்தில் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு பாராட்டுப் பெற்றதோடு ரூபவாகினியில் ஒளிப்பதிவாகி தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது. இந்நாடகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி அரங்கில் மேடையேற்றப்பட்டதுடன் ஏராளமான மக்களின் பாராட்டையும் பெற்றது. அக்காலப்பகுதியில் இருந்த பிரதமர் பிறேமதாஸ அமைச்சர் தேவராசா ஆகியோர் பாராட்டி மகிழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது. யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற திருப்பாடுகளின் காட்சி நாடகமான ''கனப்பலி'' எனும் நாடகத்தில் கைப் பாஸ் வேடம் ஏற்று நடித்து பலரின் பாராட்டைப் பெற்றதோடு திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட் கலாநிதி மரியசேவியர் அடிகளாரால் பாராட்டைப் பெற்றேன்.

**தாங்கள் எழுதி நெறியாள்கை செய்த நாடகங்கள் பற்றி?**

தீர்ப்பு,நெஞ்சில் ஒருமுள், சிலை எடுத்த செம்மல், மந்திரியின் சூழ்ச்சி, எனக்கா மன்னிப்பு, நான் துரோகி, எங்களுக்குக் காலம் வரும், அண்ணா நீ வாழ வேண்டும், படித்த முட்டாளே பார், இழப்பு, தாயுள்ளம், அவள் ஒரு கோயில் சிலையானாள் போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.

**தங்களின் கலையுலகில் மறக்க முடியாத அனுபவம் பற்றிக் கூறுங்கள்?**

நான் கனடாவில் இருந்தபோது கனடா தமிழ் வானொலியில் முதியோர் அரங்கு நிகழ்ச்சியில் பங்குபற்றி அறிமுகமானதுடன் முப்பது வானொலி நாடகங்களில் நடித்துள்ளேன். அதில் பண்டாரவன்னியன் நாடகம் உலக அரங்கில் மிகவும் பிரபல்யமானது. லண்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சவுதி போன்ற பல நாடுகளில் இருந்து என்னைப் பாராட்டியமை மறக்க முடியாத அனுபவமாகும்.

**தாங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

2011இல் கலாபூஷண விருதையும் 2012 இல் முல்லை சான்றோர் விருதையும் 2013 இல் ஆளுநர் விருதையும் 2016 இல் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று கலாசாரப் பேரவையினால் முல்லைப் பேரொளி விருதையும் 2017 இல் அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்தினால் விஸ்வகலாகீர்த்தி விருதையும், 2017 இல் வடமாகாண பண்பாட்டுத் திணைக்களத்தினால் பாராட்டுப் பத்திரத்தையும் பெற்றுக்கொண்டேன்.

**நாடகத்தின் பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

நாடகம் என்பது ஒருவர் முன்னே ஒருவர், இருவர் அல்லது பலர் குறிப்பிட்ட சூழலில் ஏதோ ஒன்றினைச் செய்து காட்டுவது, ஆற்றுவது அல்லது நிகழ்த்திக் காட்டுவதாகும். ஆற்றுப்படும் அந்தக் கணத்தில் அது பிரசன்னமாகும். நாம் அதனைப் பார்க்கின்றோம். அது முன்னே நிகழ்கின்றது. நாடகத்தில் இலக்கியம், இசை, ஓவியம், நடனம், சிற்பம், பாடல், சுட்பம் ஆகிய கலைகள் இணைந்துநிற்கின்றன. நாடகத்தின் பண்புகளாக அவைக்காற்றுகைக் கலையாக, கூட்டுக் கலையாக, ஒரு செயல் வடிவமான கலையாக, நிகழ்காலக் கலையாக, கட்புல, செவிப்புல கலையாக, இயங்கு கலையாக, உருவக் கலையாக, காலவெளிக் கலையாக, கலையையும் கலைஞனையும் பிரிக்க முடியாத கலையாக, உடனடி விமர்சனம் எழும் கலையாக, தாக்க மறுதாக்கக் கலையாக, போலச் செய்யும் கலையாக இருத்தல் என்பன நாடகத்தின் பண்புகளாகும்.

**நாடகத்தில் முரண், தோற்றுவாய், உச்சக்கட்டம், கதைப்பின்னல் ஆகிய விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை பற்றி?**

முரண் என்பது கருவின் வளர்ச்சிக்காக இடம்பெறும் முரண்பாட்டு நிலையே தோற்றுவாய் என்பது நாடகத்தின் கருவானது. அறிமுகம் செய்யும் நாடகத்தின் ஆரம்பக் கட்டத்தை குறிக்கும். உச்சக்கட்டம் என்பது நாடகத்தின் மைய உணர்வு வெளிப்படுகின்ற நிலையே உச்சக்கட்டம்.

கதைப்பின்னல் என்பது நாடகத்தின் கதையானது காரணகாரிய முறைப்படி தொகுத்துக் கூறப்படுவது கதைப் பின்னல். சமூக நாடகம், குறியீட்டு நாடகம், யதார்த்த நாடகம், அபத்த நாடகம், நடன நாடகம், சபா நாடகம், அவலச்சுவை நாடகம், மகிழ்நெறி நாடகம், சமயப்பேரர் நாடகம், இசை நாடகம், வரலாற்று நாடகம், பா நாடகம், சிறுவர் நாடகம் எனப் பல்வேறு நாடக மோடிகளைக் காணலாம்.

**பிரதேச ரீதியாக நாடகங்களை வகைப்படுத்தியிருக்கிறார்கள் அது பற்றி?**

யாழ்ப்பாணத் தமிழர் பிரதேசத்தில் கரண நாடகம், தென்மோடி, வடமோடிக் கூத்துக்களும் காத்தான் கூத்து, வசந்தன் கூத்து, கிறிஸ்தவக் கூத்து, இசை நாடகம், நவீன நாடகம் ஆகியனவும் வன்னித் தமிழர் பிரதேசத்தில் கரண நாடகம், கோவலன் கூத்து, காத்தான் கூத்து, மகிடிக் கூத்து, குட்டு முதல் கூத்து, தென்மோடிக் கூத்து, நவீன நாடகம் ஆகியனவும் மட்டக்களப்புத் தமிழர் பிரதேசத்தில் பறைமேளக் கூத்து, கரண நாடகம், வசந்தன் கூத்து, மகிடிக் கூத்து, தென் மோடிக் கூத்து, வடமோடிக் கூத்து, நவீன நாடகம், மலையகத் தமிழர் பிரதேசத்தில் அருச்சுனன் தபசு, காமன் கூத்து, வீரபத்திரர் ஆட்டம், பொன்னர் சங்கர் கூத்து ஆகியனவும் திருகோணமலை தமிழர் பிரதேசத்தில் கும்பமெடுத்தல், வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, மகிடிக் கூத்து நவீன நாடகம் என்று பிரதேசங்களுக்குப் பிரதேசம் வகைப்படுத்தியுள்ளார்கள்.

**நெறியாளர் ஒருவரிடம் இருக்க வேண்டிய தகுதிப்பாடுகள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

படைப்பாக்கத்திறன் உடையவராகவும் நல்ல தலைவராகவும் நல்ல நண்பராகவும் நாடகம் எழுதுவதில் ஓரளவேனும் ஆற்றலுள்ளவராகவும் நாடக எழுத்துருவை வாசித்து விமர்சனம் செய்கின்றவராகவும் நாடக அரங்க வரலாற்றறிவைக் கொண்டவராகவும் பல்வேறு நாடக மோடிகள் பற்றிய அறிவும் அனுபவமும் கொண்டவராகவும் குழுவை வழிநடத்தும்திறன் கொண்டவராகவும் ஏனைய கலைகளில் சிறிது அனுபவமும் ஞானமும் இருப்பவராகவும் ஒருங்கிசைவுடன் முழுமைப்படுத்தி பார்ப்போருக்கேற்ப வெளிப்படுத்தும்திறன் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சமயத்தினின்று விடுபட்ட அரங்க வடிவங்கள் பற்றிக் கூறுங்கள்?**

ஈழத்தமிழரிடையே கரகாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், கும்மி, கோலாட்டம், காவடியாட்டம் போன்ற நடன வகைகளும் உடுக்கடி கதை எனப்படும் நடிப்போடு கதை கூறும் கலையும், பறை மேளக் கூத்து, காமன் கூத்து, அருச்சுனன் தபசு, வசந்தன் கூத்து, மகிடிக் கூத்து, பள்ளுக் கூத்து, குறவஞ்சி நாடகம், திண்ணைக் கூத்து முதலிய கூத்து வகைகளும் இருந்துள்ளன. இவையாவும் நாடகத் தன்மை வாய்ந்தனவாகும். சமயச் சடங்குகளினின்று முற்றாகத் தம்மை விடுவித்துக் கொண்டு மக்களுக்குக் களிப்பூட்ட மாத்திரம் இவை நிகழ்த்தப்படுவதால் இவை கலைகளாக மாறின என்று பேராசிரியர் சி.மௌனகுரு ஈழத்துத் தமிழ் நாடக அரங்க நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**இறுதியாக நீங்கள் கலையுலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

அரங்கம் என்பது நாடகம் நிகழ்த்தப்படும் இடம். இது கலைஞரையும் சுவைஞரையும் ஒன்றிணைப்பது. கலைஞன் தன்னையே சாதனமாக்கி அக் கலைக்குரிய சுவைஞர்கள் முன்னிலையில் உருவாகும் கலை அவைக்காற்றுக்கலை எனக் கொள்ளப்படும். ஒரு நாடக ஆசிரியர் நாடகமொன்றினை எழுத முன்னர் நாடகத்தின் கரு, நாடகத்தின் வகை, நாடகத்தில் வரும் பாத்திரங்கள், நாடகத்தின் நோக்கம், கட்புல, செவிப்புல வெளிப்பாடு, நாடகம்பேசும்பண்பாடு, இலக்குப்பார்வையாளர், நாடகத்தின் காட்சி, ஆற்றுகை செய்யப்படப் போகும் அரங்கு என்பனவற்றைக் கருத்திற் கொண்டு எழுத வேண்டும். நாடகத்தை ஆற்றுகை செய்வதற்கு முன்னர் வாசிப்பு ஒத்திகை, மனன ஒத்திகை, பாத்திரப் படைப்பு ஒத்திகை, வாக்கிய வியாக்கியான ஒத்திகை, தொழில்நுட்ப ஒத்திகை, வேட உடை ஒத்திகை, பூரணப்படுத்தல் ஒத்திகை என்பனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும். நாடகம் சமூக அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும். நாடகத்தில் நடிப்பதால் புகழ் கிடைக்கின்றது. அதேசமயத்தில் நடிப்பவர் பலரும் அறிந்தவராகி விடுகின்றனர்.

மற்றவர் மதிக்கும் போதும் பாராட்டும் போதும் கலைஞருடைய அகம் திருப்தி அடைகிறது. பாத்திரங்களை ஏற்று நடிக்கும் போது அவற்றின் குணாதிசயங் களை ஆராய்ந்து அறிந்து அப்பாத்திரமாக மாறுவதன் மூலம் பிறரின் உணர்வுகளை அவர்களின் பின்னணியில் வைத்து அறிய முடிகிறது. மனிதர்களைப் புரிந்து கொள்ளும் சமூகத்தை புரிந்து கொள்ளும் பக்குவம் கிடைக்கின்றது.

ஆதலால் தயாரிக்கும் நாடகம் உளமுகத் தேடலையும் ஆன்மீக உளத் திருப்தியையும் தரக் கூடியனவாக இருக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

# போலி கடனட்டைகள் தயாரித்த முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

போலி கடனட்டைகளை தயாரித்ததாக சந்தேகிக்கப்படும் முன்னாள் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படை நேற்று முன்தினம் கைது செய்துள்ளது. தெமட்டகொடை பகுதியில் வீதி சோதனை கடமையில் இருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறித்த பிரதான பொலிஸ் பரிசோதகரின் வாகனத்தை சோதனை செய்த பின்னர், அவரது வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன்போதே இந்த கடனட்டைகள் சிக்கியுள்ளதுடன் சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு வேலை நீக்கம் செய்யப்பட்ட இந்திக பெரேரா எனும் பிரதான பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் காலை தெமட்டகொடை பகுதியில் அதிரடிப்படையினர் திடீர் வீதிச்சோதனை சாவடி அமைத்து வாகனங்களை சோதனை செய்துள்ளனர். இதன்போது ஒரு காரினை நிறுத்தி அவர்கள் சோதனை செய்துள்ளனர். அந்த வண்டியில் 27 வெளிநாட்டு சிகரட் பொதிகளும் ஒரு கிலோ காய்ந்த கடலட்டைகளும் இருந்துள்ளன.

இதனையடுத்து சந்தேக நபரான முன்னாள் பொலிஸ் அதிகாரியை ஆரமயா வீதி, தெமட்டகொடை எனும் முகவரியில் உள்ள அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று அதிரடிப்படையினர் வீட்டை சோதனை செய்தனர். இதன்போது வீட்டில் இருந்து சட்டவிரோத வெளிநாட்டு 162 சிகரட் பொதிகளையும் துப்பாக்கியொன்றினையும் பொலிஸார் கைப்பற்றினர். அத்துடன் அவ்வீட்டில் இருந்து பல்வேறு உதிரிப்பாகங்களை பொருத்தி தயாரிக்கப்பட்ட ஜீப் வண்டியொன்றினையும் பொலிஸார் கைப்பற்றினர்.

மேலதிக சோதனையின் போது அவ்வீட்டில் இருந்து 30 கடனட்டைகளும் போலியானவற்றை தயாரிக்க பயன்படுத்தப்படும் இயந்திரம் ஒன்றினையும் கடனட்டை தயாரிக்க பயன்படுத்தப்படும் 400 அட்டைகளையும் அதிரடிப் படையினர் கைப்பற்றிய நிலையில், மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க சந்தேக நபர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# அரசாங்கத்திற்கு எதிரானதே நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## அசாத் சாலி தெரிவிப்பு



(கொழும்பு)

பிரதமருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் உண்மையில் அரசாங்கத்திற்கு எதிரானதாகும் என கொழும்பு மாநகரசபையின் உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாட்டினது எதிர்காலம் கருதியே நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்படவேண்டுமே தவிர, தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளுக்காக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஆட்சிக்கவிழ்ப்பிற்காக வெளியில் இருந்து கொண்டு செயற்படும் ஒரு சில குள்ள நரிகளின் செயற்பாடுகளே இந்த பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்.

மேலும் எமது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின்படி பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படமுடியாது என்பதுடன் அதற்கான சட்ட விதிமுறைகளும் இல்லை.

எனவே இது அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமாகவே பார்க்கப்படவேண்டும். குறித்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் இறுதியில் இவ்விடயம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பரு.பிரதேச சபை கூட்டமைப்பு வசம்



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்ததுடன் தவிசாளராக அ.சா. அரியகுமார் தெரிவானார்.

பருத்தித்துறைப் பிரதேச சபைக்கான அமர்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் ரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அ.சா. அரியகுமாரும் தமிழ்த் தேசியத் தேசிய மக்கள் முன்னணி சார்பில் ஜெயபாலனின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டது.

இதில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ளதலா இருவருமாக நால்வர் வாக்கெடுப்பின் கலந்து கொள்ளாது நடுநிலைமை வகிக்க மிகுதி 17 பேரும் பகிரங்க வாக்கெடுப்பில் பங்கேற்றனர். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எட்டு உறுப்பினர்களுடன் ஈ.பி.டி.பியில் மூவரும் ஐக்கிய ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருவரும் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட ஒருவருமாக மொத்தம் 13 பேர் அ.சா. அரியகுமாருக்கு வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4பேரும் ஜெயபாலனுக்கு வாக்களித்தனர்.

இறுதியில் 13.4 என்ற அடிப்படையில் அதிகபடியான வாக்குகளைப் பெற்று த.தே. கூட்டமைப்பு ஆட்சியமைத்தது. உப தவிசாளராக பாலசிங்கம் தினேஷ் தெரிவானார். (இ-60)

# ஈழஅகதிகள் உட்பட ஐவர் கடற்படையினரால் கைது

## போதைப்பொருள் கடத்தியவர்களாம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து போதைப்பொருள்களுடன் இலங்கைக் கடற்பரப்பில் படகு ஒன்றில் பயணித்த 3 ஈழ அகதிகள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தியாவில் இருந்து கடத்தல் பொருள்களுடன் கும்பல் ஒன்று கடல் வழியாக இலங்கை வருவதாக வடக்கு பிராந்திய கடற்படை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

சர்வதேச கடல் எல்லை முதல் காங்கேசன்துறை கடல் வரை கடற்படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமாக கடலில் நின்று கொண்டிருந்த நாட்டுப் படகில் இருந்தவர்களிடம் கடற்படையினர் விசாரணை நடத்தினர்.

அந்தப் படகில் இலங்கைக்கு சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட போதைப் பொருள்கள் இருந்தமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து படகில் இருந்த 5 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் காங்கேசன்துறைக்கு அழைத்து வரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேகநபர்களில் மூவர் மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள ஈழ அகதிகள் என்பது முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது" என்று கடற்படையினர் தெரிவித்தனர். (இ-7)

## ரூ.10,000 சம்பள அதிகரிப்புக்கு அரசு இணக்கம்

# விமான நிலைய ஊழியர்களின் வேலை நிறுத்த போராட்டம் நிறைவு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் மாலையுடன் கைவிடப்பட்டது.

விமானநிலைய ஊழியர்களின் கோரிக்கைக்கு அமைய 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க அரசாங்கத் தரப்பு இணக்கம் தெரிவித்ததையடுத்து, இவ்வேலை நிறுத்தம் நேற்று முன்தினம், மாலையுடன் முடிவுக்கு வந்தது.

மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வழங்கப்படாததால் அதனை உடனடியாகப் பெற்றுத் தரக்கோரியே கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

1994 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை கட்டுநாயக்கா விமான நிலைய ஊழியர்களுக்கு வழங்கப்படும் 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை இவ்வருடம் பெற்றுத் தர வேண்டுமெனக்கோரி விமான நிலைய ஊழியர்களின் தொழிற்சங்கத்தினரால் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் கடந்த 28 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை அமைச்சர் கிழித்து குப்பைக் கூடைக்குள் போட்டுள்ளார்.

அமைச்சரின் இச்செயன்முறை தாங்களுடைய சேவையை இழிவுபடுத்தியதாகக் கூறி கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்கள் 2 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தத்தை ஆரம்பித்ததுடன் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிவரையில் போக்குவரத்து அமைச்சருக்கு கால அவகாசம் வழங்கியிருந்தனர்.



அக்காலத்துக்குள் அரசாங்கத்திடமிருந்து தகுந்த பதில் கிடைக்காததனால் நேற்று பிற்பகல் 12.30 மணி தொடக்கம் விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் விமான கட்டுப்பாட்டு அதிகாரிகளைத் தவிர்ந்த ஏனையோர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில் அமைச்சிலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பையடுத்து கொழும்பு விரைந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அமைச்சின் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது அவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவதாக அரசாங்கத்தரப்பு உறுதிமொழி வழங்கியதையடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. (இ-7)

# வவுணதீவு பிரதேசசபையின் ஆட்சி கூட்டமைப்பின் வசம்!



(ஹாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசபையின் ஆட்சி அதிகாரத்தினையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பிரதேச சபையின் அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் எம். வை. சலீம் தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெற்றது.

சபையின் தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்லத்தம்பி சண்முகராசாவும் உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொ. செல்லத்துரையும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றதில் செ. சண்முகராசாவுக்கு 10 வாக்குகளும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் த.இராமகிருஷ்ணனுக்கு 4 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

சபையின் வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு உறுப்பினரும் நடுநிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மோடியின் சாயம் வெளுத்து வருகிறது ராகுலுக்கு அரசியல் முதிர்ச்சியில்லை



## தேவகவுடா கடும் தாக்கு

(பெங்களூர்)

கர்நாடகாவில் சட்டசபை தேர்தலையொட்டி பிரதமர் மோடி மற்றும் ராகுல்காந்தி ஆகிய இருவரையும் மதசார்பற்ற ஜனதா தள தலைவர் தேவகவுடா கடுமையாக தாக்கி பேசினார்.

முன்னாள் பிரதமரும், மதசார்பற்ற ஜனதா தள தலைவருமான தேவகவுடா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

கர்நாடக மாநில சட்ட சபை தேர்தலில் எங்கள் கட்சியே முதலிடத்தை பிடிக்கும் என்று நாங்கள் எடுத்த கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

நான் அரசியலுக்கு வந்து இப்போது 13ஆவது தேர்தலை சந்திக்க போகிறேன். எனக்கு இப்போது 85 வயது ஆகிறது. இந்த தேர்தலில் எங்களுக்கு தனிப் பெரும்பான்மை கிடைத்தால் இந்த மண்ணின் மக்கள் எனக்கு கொடுத்த பரிசாக கருதுவேன். இல்லை என்றால் அவர்களுடைய தீர்ப்பின் படி நடந்து கொள்வேன்.

நாங்கள் கடந்த காலத்தில் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாக இருந்ததால் அதன் பலனை இப்போது கூட அனுபவித்து வருகிறோம். இனி அதுபோன்று நடக்காது. அதே நேரத்தில் நாங்கள் பதவிக்கு வரவேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கவில்லை.

எங்கள் கட்சியை பொறுத்தவரையில் மாநிலத்தில் ஒரு நிலையையும், மத்தியில் ஒரு நிலையையும் எடுத்துக் கொள்வோம். நான் எப்போதுமே மதசார்பற்ற அணியில் இருந்து வருகிறேன். மதசார்பற்ற கொள்கை என்பது காங்கிரசுக்கு மட்டும் சொந்தமானது அல்ல.

பிரதமர் மோடியால் அடிப்படை தன்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. டில்லியில் அதிகார பசி அரசியல் நடந்து வருகிறது.

10 ஆண்டுகள் காங்கிரஸ் கூட்டணி அரசியலில் செய்த சில தவறுகளால் மோடி ஆட்சிக்கு வந்துவிட்டார். பல கட்சி கூட்டணி ஆட்சி மீது அன்றைய சூழ்நிலையில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்தியாவை பொறுத்தவரை பல கட்சி கூட்டணி ஆட்சிதான் தேவை. நாட்டின் நலனுக்காக மதசார்பற்ற அணிகளோடு கைகோர்த்து செயற்படுவேன்.

தற்போது பிரதமர் மோடியின் சாயம் வெளுத்து வருகிறது. அவர் கடந்த 4 ஆண்டுகளாக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும், விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார். அவருடைய பேச்சு இனி மக்களிடம் எடுபடாது.

எங்களை பாரதிய ஜனதாவின் 'பி'அணி என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லி வருகிறார்கள். ராகுல்காந்தியும், சித்தராமையாவும் பல குற்றச்சாட்டுக்களை எங்கள் மீது சொல்கின்றனர். அதே நேரத்தில் பாரதிய ஜனதாவுக்கு எதிராக போராட எங்களை அவர்கள் அழைக்கிறார்கள்.

ராகுல்காந்தியை பொறுத்தவரையில் அரசியல் முதிர்ச்சி இல்லாமல் பேசுகிறார். யாராவது சொல்லிக் கொடுப்பதை கிளிப்பிள்ளை போல அவர் சொல்கிறார். அவருக்கு சரியாக வரலாறு தெரியாது. கர்நாடகாவின் நிலைமை என்ன என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதிலிருந்தே நாங்கள் பாரதிய ஜனதாவுக்கு எதிராக செயற்பட்டு கொண்டிருக்கிறோம். குஜராத் மாநிலம் கோத்ரா வில் ரயில் எரிப்பு சம்பவம் நடந்து வன்முறை ஏற்பட்ட போது, கலவரத்துக்கு மத்தியில் நான் அங்கு சென்று வந்தேன்.

குமாரசாமி முதலமைச்சராக இருந்தபோது இங்கு பாரதிய ஜனதா கட்சியினர் மதவாத ரீதியில் அத்துமீறிய போது சதானந்த கவுடாவை கைது செய்தோம்.

நான் மோடியை விமர்சிப்பதில்லை என்று கூறுவது தவறானது. ரூபாய்நோட்டு மதிப்பிழப்பு செய்யப்பட்டபோது அதை கடுமையாக எதிர்த்தேன். கறுப்பு பணத்தை திரும்பகொண்டுவருவேன் என்று கூறி ஏமாற்றியதை நான் தொடர்ந்து விமர்சித்து வருகிறேன்.

லிங்காயத் சமூக பிரச்சினையில் மாநில காங்கிரஸ் அரசு கர்நாடக மக்களை பிரித்தாளும் முறையை கையாளுகிறது. இது தவறான போக்கு. காங்கிரஸ் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் எப்போதுமே பயன்படுத்தி விட்டு தூக்கி எறிவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

ஆனாலும் தேர்தலுக்கு பிறகு அவர்கள் எங்களை நாடி வரும் சூழ்நிலை ஏற்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எகிப்து ஜனாதிபதிக்கு பிரான்ஸ் வாழ்த்து



(பாரிஸ்)

எகிப்தில் நடந்த தேர்தலில் 97 சதவீத வாக்குகள் பெற்று இரண்டாம் முறையாக ஜனாதிபதியாக தேர்வான அப்துல் சிசிக்கு பிரான்ஸ் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

எகிப்து நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் கடந்த வாரம் நடந்தது. இதற்கான வாக்குப் பதிவு பல்வேறு கட்டங்களாக நடந்தன. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி அப்தெல் ஃபாட்டா அல்-சிசி மீண்டும் போட்டியிட்டார்.

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சிறையில் உள்ள நிலையில் பல்வேறு கட்சிகள் இந்த தேர்தலை புறக்கணித்தன. இதனால், அல்-சிசியை எதிர்த்து முக்கிய பிரமுகர்கள் யாரும் போட்டியிடவில்லை. இறுதியில் மோசா முஸ்தபா என்பவர் வேட்பாளராக களம் இறங்கினார். இந்த தேர்தலில் 6 கோடி மக்களில் 2.3 கோடி மக்கள் வாக்களித்தனர்.

இதற்கிடையே, பதிவான வாக்குகளில் 97 சதவீதம் வாக்குகள் பெற்று அப்துல் சிசி மீண்டும் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், எகிப்தில் நடந்த தேர்தலில் 97 சதவீத வாக்குகள் பெற்று இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக தேர்வான அப்துல் சிசிக்கு பிரான்ஸ் ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரான்ஸ் நாட்டின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் அக்னிஸ் வொன் டெர் முஹில் கூறுகையில், எகிப்து ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ள அப்துல் சிசிக்கு வாழ்த்துக்கள். எகிப்துக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பிரான்ஸ்நிச்சயம்செய்யும்எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# துப்பாக்கிச் சண்டையில் 5மாவோயிஸ்டுகள் பலி



(ராஞ்சி)

ஜார்கண்ட் மாநிலம் லேட்கர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருடனான துப்பாக்கிச்சண்டையில் ஐந்து மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

சத்தீஸ்கர், ஜார்கண்ட் மாநிலத்தில் நக்சலைட்கள் மற்றும் மாவோயிஸ்ட்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. பணக்காரர்கள் மற்றும் அரசியல்செல்வாக்கு மிக்கவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்திவரும் இந்த குழுவினர் அவ்வப்போது பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரையும் தாக்கிக் கொல்கின்றனர்.

தடைசெய்யப்பட்ட இயக்கத்தை சேர்ந்த இந்த குழுவினரை தடுத்து நிறுத்த நக்சல் ஒழிப்புப்படை என்ற தனிப் படை பிரிவு இயங்கி வருகிறது. காட்டுப் பகுதிகளில் மறைந்திருக்கும் நக்சலைட்களையும், மாவோயிஸ்ட்களையும் இந்த தனிப்படையினர் கைது செய்தும் சுட்டுக் கொன்றும் வருகின்றனர்.

இந்நிலையில், ஜார்கண்ட் மாநிலம் லேட்கர் மாவட்டத்தில் உள்ள சிரந்தாக் காட்டுப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நேற்றுக்காலை தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது பாதுகாப்புப் படையினருக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நடந்தது. இந்த துப்பாக்கிச்சண்டையில் ஐந்து மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சுட்டுக்கொல்லப்பட்டவர்களிடம் இருந்து மூன்று ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பத்து பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தானில் தூக்கு!

## இராணுவத்தளபதி உறுதி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பத்து பயங்கரவாதிக்கு இராணுவ நீதிமன்று விதித்த மரண தண்டனையை அந்த நாட்டின் இராணுவ தளபதி ஜெனரல் கமர் ஜாவத் பஜ்வா உறுதி செய்தார்.

பாகிஸ்தானில் பல்வேறு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு உயிரிழப்புகளை ஏற்படுத்திய 10 பயங்கரவாதிகளுக்கு இராணுவ நீதிமன்றுகள் மரண தண்டனை விதித்தன.

இவர்கள் அங்கு 62பேரை கொன்று குவித்தவர்கள் என அந்த நாட்டின் இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.




குறிப்பாக முகமது இஸ்டாக்கும், முகமது ஆசிமும் சேர்ந்து பாகிஸ்தானின் சபிமத இசைக்கலைஞரான அம்ஜத் சப்ரியையும், சட்ட அமுலாக்கல் பிரிவினரையும் கொன்றவர்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்களுக்கு இராணுவ நீதிமன்று விதித்த மரண தண்டனையை அந்த நாட்டின் இராணுவத் தளபதி ஜெனரல் கமர் ஜாவத் பஜ்வா உறுதி செய்துள்ளார். (இ-7)

# கிளர்ச்சியாளர்கள் வெளியேற்றம்

# 40 ஆயிரம் மக்கள் கூட்டாவுக்கு திரும்பினர்

(மொஸ்கோ)

டமாஸ்கஸ் நகரில் போர் காரணமாக கிளர்ச்சியாளர்கள் வெளியேறிய தால் உள்ளூர் மக்கள் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கிழக்கு கூட்டாவுக்கு திரும்பினர். சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நகரை அடுத்து அமைந்து உள்ள கிழக்கு கூட்டாதான், கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்து வந்த கடைசி முக்கிய பகுதி ஆகும்.

அதை மீட்பதற்காக ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் படைகள் கடந்த 2 மாதங்களாக கடுமையாக சண்டையிட்டன. இதில் கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த இடங்களில் 95 சதவீத இடங்களை ஜனாதிபதி படைகள் மீட்டு விட்டன. இந்தப் போரில் ஆயிரத்து 600-க்கும்மேற்பட்ட அப்பாவிமக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அந்தப் பகுதியின் கடைசி இடமான டூமாவில் இருந்து கிளர்ச்சியாளர்களை பின்வாங்கச் செய்வதற்கு, அரசுக்கும், அவர்களுக்கும்இடையேரஷ்யா சமரசம் செய்து வைத்தது.

அதன் பலனாக அங்கு இருந்து 24 மணி நேரத்தில் ஆயிரத்து 123 கிளர்ச்சியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் வெளியேறினர். இதுவரை அங்கு இருந்து 2 ஆயிரத்து 269 கிளர்ச்சியாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் வெளியேறியுள்ளானர்.

இந்தநிலையில் போர் காரணமாக அங்கு இருந்து வெளியேறிய உள்ளூர் மக்கள் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கிழக்கு கூட்டாவுக்கு திரும்பியுள்ளனர். இந்த தகவலை ரஷ்ய இராணுவ அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்டது. (இ-7)

# ரஷ்யாவுடன் உறவைப் பேண அமெரிக்க ஜனாதிபதி விருப்பம்

(வோஷிங்டன்)


ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் சிறந்த உறவை பேண வேண்டும் என எண்ணியுள்ள போதிலும், அது நிச்சயமற்றது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பால்ட்டிக் நாடுகளின் தலைவர்களுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (7)


# "யாழ்.மருத்துவக் கண்காட்சி" ஆரம்பம்



























படங்கள்:-பொ.சோபிகா




(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் 40ஆவது வருட நிறைவை முன்னிட்டு மாபெரும் "யாழ்.மருத்துவ கண்காட்சி" நேற்று யாழ்.மருத்துவ பீட வளாகத்தில் ஆரம்பமாகியது.

யாழ்.மருத்துவபீடமானது வடமாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து உள்நாட்டு, வெளிநாட்டு யாழ்.மருத்துவபீட பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் வலூஷன் பிறைவெட் லிமிட்டட்டின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்காட்சியை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜி.குணசீலன் ஆரம்பித்து வைத்தார்.

மருத்துவதுறையின் நவீன வளர்ச்சிகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் ஆய்வு முடிவுகள் பற்றிய விழிப்புணர்வுகளை மக்களுக்கு வழங்கவும், முறையான பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை மேம்படுத்தல் பற்றிய முக்கிய சுகாதார தகவல்களை வழங்கவும், பிரதான தொற்றா நோய்களான நீரிழிவுநோய், உயர்குருதியமுக்கம், பாரிசவாதம், இருதய நோய்கள், நாட்பட்ட சுவாசநோய், புற்றுநோய் மற்றும் ஏனைய முக்கிய நோய்கள் பற்றிய விழிப்புணர்வை வழங்கவும், வட மாகாண மக்களுக்கு இலங்கையில் கிடைக்கக் கூடிய சுகாதார சேவைகள் பற்றி விளக்கவும், பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார விஞ்ஞானம் சார்ந்த அறிவையும், ஆற்றலையும் மேம்படுத்தவும், மேலும் இளைஞர்களுக்கு சுகாதார துறை சார் தொழில் வாய்ப்புக்களை தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குவது போன்ற நோக்கங்களை உள்ளடக்கி இந்த மருத்துவ கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியானது அடிப்படை உயிரியல் விஞ்ஞானம், நடைமுறை சவால்கள், நவீன மருத்துவ தொழில்நுட்பம், துறைவழிகாட்டல், குழந்தை, இளமைப்பருவ, வளர்ந்தோர் மற்றும் வயோதிப உடல், உள ஆரோக்கியமும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் எனும் பிரதான தலைப்புகளினூடும் அவற்றிக்கூடாக பல உப தலைப்புக்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இக் கண்காட்சியானது நாளை மறுதினம் 7 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய கலாநிதி எஸ்.ரவிராஜ், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

ஆரம்ப நாளான நேற்று பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர். (இ-9)

## 200 மில்லியன் ரூபாய் நிதி மோசடி

(கொழும்பு)

200 மில்லியன் ரூபாய் பணத்தை மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்காக பொலிஸார், பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.



புத்கமுவ, ராஜகிரிய பகுதியில் வசிக்கும் சன்ஜீவ டீ சில்வா பண்டிதசேகர என்ற சந்தேகநபர் குறித்து தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர் தொடர்பில் தகவல்கள் ஏதேனும் தெரியவருமாயின், பொதுமக்கள் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் 011 239 52 48 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு, பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

# ஆணைக்குழு அறிக்கைகள் மூடி மறைப்பு

## ஜனாதிபதி அதிருப்தி



(கொழும்பு)

சில ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் கையளித்ததன் பின்னர் அது மூடி மறைக்கப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கலைத்துறை குறித்து தயாரிக்கப்பட்ட ஆணைக்குழு அறிக்கைகள் 3 ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய தொலைக்காட்சி தொடர்பான அறிக்கை, தேசிய சினிமாவை மேம்படுத்துவது தொடர்பான அறிக்கை மற்றும் பாடல்கள், இசையமைப்பு, பாடகர்கள் தொடர்பான அறிவுசார் சொத்துடைமை குறித்த அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விவசாயிகளிடமிருந்து உறுதி செய்யப்பட்ட விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுகிறதா-டக்ளஸ் கேள்வி

(கொழும்பு)

விவசாய மக்களிடமிருந்து உறுதி செய்யப்பட்ட விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதாக அரசு ஊடகங்களில் கூறி வருகின்ற போதிலும், செயற்பாட்டில் அத்தகைய ஏற்பாடுகள் ஏதேனும் நடைபெறுகின்றனவா? எனக் கேட்க விரும்புகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான விவாதம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சுமார் 10 மாவட்டங்களிலிருந்து நெல் அறுவடைகள் கிடைத்து வருகின்ற நிலையில், நெல் கொள்வனவு செய்வதில் அரசு அசமந்தமாக இருப்பதாகவே அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்து இருப்பதையும் இங்கு அவதானத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். இத்தகைய நிலையில் எதிர்காலத்தில் அரிசியின் விலையில் மேலும் அதிகரிப்பினை எதிர்பார்க்க வேண்டி வரும் என்பதில் சந்தேகமில்லை.



எனவே, உரிய காலங்களில் உரிய நடவடிக்கை எடுத்து, பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தாமல், அனைத்துக் காலங்களிலும் வரிகளை அதிகரித்துக் கொண்டிருப்பதில் மட்டுமே நீங்கள் அவதானம் செலுத்துவதாகவே தெரியவருகின்றது எனத் தெரிவித்தார். (இ-7)

# கண்டியில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்

## பைஸர், ஹாஷிம் கோரிக்கை



(கண்டி)

திகன, தெல்தெனிய வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படாவிட்டால் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக அமைச்சர்களான பைஸர் முஸ்தபா, கபீர் ஹாஷிம் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.


தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் உச்ச நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்படும் எனவும் அமைச்சர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது, கண்டி - திகன, தெல்தெனிய உட்பட கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதியளவு நட்டஈடு வழங்கப்படவில்லை என அமைச்சர்களான பைஸர் முஸ்தபா, கபீர் ஹாஷிம் ஆகியோர் ஒன்றிணைந்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை பிரசாரங்களுக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இதன்போது, அமைச்சர் பைஸர் முஸ்தபா சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் தெரிவித்தார். (இ-7)

# செய்த பிழையை உணர்ந்த மேர்வின் உருக்கமான பேச்சு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகிச் சென்றமையே தான் செய்த மிகப்பெரிய பிழை என்று முன்னாள் மக்கள் தொடர்பாடல் அமைச்சரான மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகியதால்தான் அத்தனை பிரச்சினைக்கும் காரணம் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா இதன்போது கருத்து வெளியிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கியவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான். ஐக்கிய தேசியக் கட்சியினால்தான் இன்று அனைவரும் தப்பித்திருக்கின்றனர் என மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## துன்பங்களுக்குப் பழகுவோம்!

சௌகரியங்களுக்கே பழகிப்போய் விட்ட நம் உடம்பும் மனமும் துன்பங்களை வெறுக்கின்றன. இது மனித சுபாவம் என்றாலும் இந்தப் போராட்டத்தில் நாம் வென்றாக வேண்டும். துன்பங்களை எதிர் கொள்ளவும் சமாளிக்கவும் நாம் மேற்கொள்ளும் ஆயத்தங்களை நான் குறை சொல்ல வரவில்லை.

நமக்குத் துன்பங்கள் வரவே கூடாது என்று எண்ணுவது தவறு. நம் ஆயத்தங்களையும் மீறி வரக் கூடிய துன்பங்களைக் கண்டு சலித்துக் கொண்டும் வெறுத்துப் போயும் பேசுகிறோம் அல்லது நடந்து கொள்கிறோமே, அது அதைவிடத் தவறு.

ஒரு தியேட்டரில் அமர்ந்து படம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அருகில் இருவர் பேசிக் கொள்கிறார்கள். "ச்சே! பஸ்ஸிற்கு அரை மணி நேரம் நின்னு வாழ்க்கையே வெறுத்துட்டேன்" என்கிறார் ஒருவர்.

படம் முடியப் போகிற நேரத்திற்குச் சற்று முன்பாகத் திரையரங்கின் குளிர்சாதனம் சத்தமின்றி நிறுத்தப்பட்டு விட்டது. வியர்க்க ஆரம்பித்ததும் இன்னொருவர் தியேட்டர்காரரைக் கண்டபடி திட்ட ஆரம்பிக்கிறார்.

எனக்கு இந்த செய்கைகளும் பேச்சும் வேடிக்கையாகவே பட்டன. பஸ் தாமதமாக வருவதும் திரையரங்கு அசௌகரியங்களும் பிற தொல்லைகளும் நமக்குப் புதியனவா என்ன? இவை வாழ்வில் பழக வேண்டிய அம்சங்கள். நாம் என்ன அமெரிக்காவிலா பிறந்திருக்கின்றோம்! நம் சூழ்நிலைகள் எப்போது இவர்களுக்குப் புரியப் போகிறது? இந்த விடயங்களில் புலம்பி ஆகப் போவது என்ன?

பணக் கஷ்டம், உடற்சிரமம், மனக் கஷ்டம் இவையெல்லாம் நமக்கு வரக் கூடாது என்று எண்ணுவது நடைமுறைக்குச் சரிப்பட்டு வராத விடயம்.

ஆண்டவனை வேண்டும் போது கூடப் பலர், "நான் நல்லா இருக்கனும்; எனக்கு எந்தக் கஷ்டமும் வரக் கூடாது" என்றெல்லாம் வேண்டிக் கொள்கிறார்கள். இதை விட அபத்தமான வேண்டுதல் வேறு இருக்க முடியாது.

"ஆண்டவா! இந்த உலகம் துன்பங்கள் நிறைந்தது என்பதை உணர்கிறேன். அவற்றை நான் எதிர்கொள்ளவும் உறுதியுடன் சமாளிக்கவும் போதுமான மனபலத்தைத் தா! என்பது தான் நியாயமான வேண்டுதலாக இருக்க முடியும்.

நாம் இந்த உலகின் முடிசூடா மன்னர்கள்? எல்லாமே நம் விருப்பப்படியா நடக்கும்? நம் கட்டளையை ஏற்று எல்லோருமா செயற்படக் காத்திருக்கிறார்கள்? இந்தக் கேள்விகள் எதற்குமே இல்லை என்பது பதிலாகும் போது எப்படித் துன்பம் மட்டும் வராமல் இருக்கும்?

துன்பங்கள் நம் மனத்தைப் பலப்படுத்துகின்றன. பார்வைகளைப் பக்குவப்படுத்துகின்றன.

இந்தப் பக்குவம் பின் வரப் போகும் எத்தகைய துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் மனநிலையைத் தந்துவிடும்.

இந்த மன நிலையை எட்டிவிட்டால் வள்ளுவரின் வாக்குப்படி துன்பங்களைக் கண்டு நம்மால் சிரிக்க முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

# யாழ்.போதனா வைத்தியசாலையின் ஒரு வரலாற்றுப்பார்வை



யாழ்.போதனா வைத்தியசாலையில் 100 வருடங்களுக்கு முற்பட்ட பழைமையான கட்டடம் ஒன்று அதன் அமைப்பு மாறாது புதுப்பிக்கப்பட்டு 10.03.2018 அன்று அருங்காட்சியகமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இக்கட்டுரை வைத்தியசாலைப் பணிப்பாளரால் எழுதப்பட்டுள்ளது.

### ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழக வைத்தியசாலை (Friend in Need Society Hospital)

இன்று வடமாகாணத்தில் உள்ள ஏறத்தாழ 1.3 மில்லியன் மக்களது பிரதான மருத்துவ சேவையை வழங்கும் யாழ்.போதனா வைத்தியசாலையானது ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழக வைத்தியசாலை (Friend in Need Society Hospital) என்றே ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ் வைத்தியசாலையானது வைத்தியர் கிறீன் அவர்களுடைய உதவி மற்றும் ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழகத்தின் ஒத்துழைப்புடன், அன்றைய வடக்கு மாகாண அரசாங்க அதிபர் அக்லண்ட் டைக் (Ackland Dyke) அவர்களால் உருவாக்கப்பட்டது.

1850 முதல் 1907 வரை, ஆபத்தில் உதவும் மருத்துவ அலுவலர் குழாம் அநேகமாக வைத்தியர் கிறீன் அவர்களுடைய மருத்துவ கல்லூரியின் பட்டதாரிகளிலிருந்தே பெறப்பட்டனர். தனது காலத்தில் வைத்தியர் சாமுவேல் கிறீன் அவர்கள் திறமை மிக்க சத்திரசிகிச்சை நிபுணராக இருந்ததுடன் ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழக வைத்தியசாலையின் முதலாவது வருகை சத்திர சிகிச்சை நிபுணராகவும் கடமையாற்றினார். இவ் வைத்தியசாலை ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழக தொண்டர்களால் நடத்தப்பட்டது.

1907 இல் இவ் வைத்தியசாலை அரசாங்கத்தின் சிவில் (குடிசார்) மருத்துவத் திணைக்களத்தின் கீழ் வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராணுவ மருத்துவத் திணைக்களத்தின் பதிலீட்டுக்குடிசார் மருத்துவத் திணைக்களமாயிருந்தது. பின்னர் யாழ்ப்பாணம் சிவில் வைத்தியசாலை (Jaffna Civil Hospital) என மீளப் பெயரிடப்பட்டது.

1920 இன் மத்தியிலிருந்து 1930 இன் முற்பகுதி வரை தகைமை பெற்ற மூன்று சத்திர சிகிச்சை நிபுணர்கள் யாழ்ப்பாணம் சிவில் வைத்தியசாலையில் கடமையாற்றினார்கள். அவர்கள் வைத்தியர் I.T.குணரத்தினம் F.R.C.S, வைத்தியர் A.H.C. டி சில்வா F.R.C.S, வைத்தியர் மில்றோய் போல் F.R.C.S ஆகியோர் ஆவர். அக்காலப்பகுதியில் வைத்தியசாலையின் மொத்தப் படுக்கைகள் வளம் 200 ஆகவிருந்தது (தனிப்பட்ட கட்டணம் செலுத்தும் நோயாளர்களுக்கான 6 படுக்கைகள் கொண்ட திருநாவுக்கரசு ஞாபகார்த்த விடுதி உட்பட). வைத்திய நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர், கண் சிகிச்சை நிபுணர் மற்றும் ஒரு விடுதி அலுவலர் ஆகிய நிலைகளிலான 4 வைத்தியர்களை மொத்த மருத்துவ அலுவலர் குழாம் உள்ளடக்கி இருந்தது.

வைத்தியர் மில்றோய் போல் அவர்கள் தமது வருகையுடன் அனுபவம் மிக்க சத்திர சிகிச்சைக் கூட சகோதரி ஒருவரை நியமிக்கச் செய்ததுடன் கொழும்பிலிருந்து உயர் அமுத்த தொற்று நீக்கியொன்றையும் தருவித்திருந்தார். அத்துடன் சத்திரசிகிச்சை கூடப் பரிசாரகர் ஒருவரைப் பயிற்றுவித்ததுடன் விபத்துகளால் காயமடைந்தவர்களுக்கான சத்திர சிகிச்சைகளை இரவில் கூட பெற்றோமக்ஸ் (Petromax) மற்றும் மின்சூள் (Torch light) வெளிச்சத்தில் செய்தார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படத்தக்கதிலும் பார்க்க அதிக கூட்டம் இல்லாமை மற்றும் குறிக்கப்பட்ட நேரங்கள் தவிர பார்வையாளர்கள் குறைவாக இருந்தமை மற்றும் கிருமியின்மையின் (Asepsis) கடுமையான அவதானிப்பு மற்றும் சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் விடுதி ஆகிய இரண்டிலுமான அதிதிறமையான தாதியத்தால் சத்திர சிகிச்சைக்குப் பிந்திய தான கீழ்த்தொற்று (Sepsis) அசாதாரணமாயிருந்ததாக வைத்தியர் போல் அவர்கள் 1931 இல் தனது குறிப்பேட்டில் பதிவிடுகிறார்.

யாழ்ப்பாணத்தின் சுகாதார சேவைகளில் அரசாங்கத்துறையின் துரிதமான விரிவாக்கம் மற்றும் அபிவிருத்திகள் 1950 களில் ஆரம்பமாயின. அடிப்படை மற்றும் உப விசேட துறைகளுக்கு நிபுணர்கள் நியமிக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணம் சிவில் வைத்தியசாலையானது 1956 இல் யாழ்ப்பாணம் அரச பொது வைத்தியசாலையானது (Govt. General Hospital Jaffna).



1960 களில் இங்கிலாந்தின் ராஜரீக கல்லூரியின் (Royal College of England) வைத்தியர்களின் பட்டப்பின் பயிற்சி இறுதிப்பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட மத்திய நிலையமாக யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை இருந்தது.

அதிகரித்த சுகாதார அவசிய தேவைப்பாடுகள், அசௌகரியமான (Clumsy) மற்றும் அனுமதிக்கப்படத்தக்கதிலும் அதிகமான நோயாளர் வருகை, பரந்த நீண்டகாலத்திட்டங்கள் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் நீடிப்புக்களையும் புதிய கட்டட நிர்மாணிப்புக்களையும் கொண்டு வந்தன. நோய்க்கூற்றியல் (Clinical) கற்கைகளுக்காக மருத்துவ மாணவர் அணியினர் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அனுமதிக்கப்பட்டனர். யாழ்ப்பாணம் மருத்துவ கல்லூரி உருவாக்கப்பட்டதன் விளைவாக யாழ்ப்பாண வைத்தியசாலை ஒரு போதனா வைத்தியசாலைத்தரத்துக்கு உயர்ந்தது.

### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தற்போதைய புள்ளி விபரங்கள்

யாழ்.மாவட்டம் 624,179 மதிப்பிடப்பட்ட சனத்தொகையுடன் 15 பிரதேச செயலகப்பிரிவுகளை உள்ளடக்கியதாகும். மாகாண நிர்வாகத்தின் கீழ் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்புச் சேவைகளை வழங்கும் 43 சுகப்படுத்தும் நிறுவனங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒரே ஒரு மூன்றாம் நிலை வைத்தியசாலையான (Tertiary care Hospital) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையால் மூன்றாம் நிலை பராமரிப்புச் சேவைகள் வழங்கப்படுவதுடன் அது மத்திய சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது. இவ் வைத்தியசாலை முழு வடக்கு மாகாணத்துக்குமான மூன்றாம் நிலை பராமரிப்பு வழங்குனராயிருந்தும் மனிதவளம், உட்கட்டமைப்பு, நிலம் மற்றும் போக்குவரத்து வசதிகள் பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றது.

மருத்துவ அதிதீவிர சிகிச்சைப் பிரிவு (MICU), அதிதீவிர சத்திர சிகிச்சைப்பிரிவு (SICU), இருதய சிகிச்சைப்பிரிவு(CCU), முதிராக் குழந்தைகள் அலகு(NICU), நரம்பியல் சிகிச்சைப்பிரிவு, சிறுநீரக நோயியல் பிரிவு, இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சைப் பிரிவு முதலான விசேட பராமரிப்புப் பிரிவுகளுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 1280 படுக்கைகள் வளத்தைக் கொண்டுள்ளது.

தற்போது 1600 இற்கும் மேற்பட்ட அர்ப்பணிப்புள்ள அலுவலர் குழாம் அங்கத்தவர்கள் 3 சேவை மாற்று முறைமையில் 24 மணித்தியாலங்கள் சேவை செய்கின்றனர். இந்த அலுவலர் குழாத்தில் மருத்துவ பீட வைத்திய நிபுணர்கள் உட்பட 77 விசேட வைத்திய நிபுணர்கள் கடமையாற்றுகின்றனர். 244 வைத்திய உத்தியோகத்தர்கள், 494 தாதிய உத்தியோகத்தர்கள், 97 நிறைவாக்கும் மருத்துவத் தொழில் புரிவோர், 50 துணை மருத்துவ அலுவலர் குழாத்தினர் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் , அலுவலக உத்தியோகத்தர்கள் முதலான பல பிரிவினர் உள்ளனர்.

நாளாந்தம் சுமார் 4500 நோயாளர்களுக்கு இவ்வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்படுகின்றது. இவர்களில் வெளிநோயாளர்கள் 800 பேர், உள்ளக நோயாளர்கள் 1200 பேர் ஆவர். இவர்களுடன் 2500 பேர் பல்வேறு சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறுகின்றனர். ஆகவே, இவ் வைத்தியசாலையை ஒவ்வொரு நிலையிலும் (Aspect) மேம்படுத்த வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அருங்காட்சியகம் (Museum)


வைத்தியசாலையில் உள்ள நூறு வருடங்கள் பழைமையான கட்டடங்களில் ஒன்று தற்போது அருங்காட்சியகமாகப் பாதுகாக்கப்படுகின்றது. மிகவும் உயர்தரமான கட்டடப் பொருட்களைக் கொண்டு அமைப்பு மாறாது இக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. திருமதி. தயாரதி சீவரத்தினம் அவர்கள் தமது கணவர் திரு. S.V. பொன்னம்பலம் சீவரத்தினம் அவர்களுடைய ஞாபகார்த்தமாக வழங்கிய மனமுவந்த நன்கொடையால் இவ் அருங்காட்சியக கட்டடம் உருவாகியுள்ளது.

இங்கே 20 - 30 வருடங்களுக்கு முன்னர் பாவனையில் இருந்த சத்திரசிகிச்சைக் கூட, ஆய்வுகூட உபகரணங்கள் தற்போது பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வைத்தியசாலை தொடர்பான ஆவணங்கள், புகைப் படங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட உள்ளன.

பொதுமக்கள் யாழ்.போதனா வைத்தியசாலை தொடர்பில் வெளிவந்த செய்திக் குறிப்புக்கள், கட்டுரைகள், புகைப்படங்கள், ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழகம், 1850 களில் வைத்தியசாலை உருவாக்கத்தில் பங்களித்த அக்லாண்ட டைக், யாழ்ப்பாணம் சிவில் வைத்தியசாலை தொடர்பான தகவல்கள், போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டமை பற்றிய செய்தி ஆதார மூலங்கள், 1990 மற்றும் 1995 காலப்பகுதியில் இடம் பெயர்ந்து இயங்கியமை பற்றிய செய்திகள், புகைப்படங்கள் முதலான வரலாற்றுத் தகவல்களை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஆவணங்களைப் பேணுவோர் தங்களிடம் உள்ளவற்றை பகிர்ந்து எண்ணிம முறையில் பிரதி எடுத்த பின்னர் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஏனைய துறைசார் உத்தியோகத்தர்கள் தங்கள் விபரங்களை, புகைப்படங்களை தந்து ஆவணப்படுத்தலுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் வாரத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் அருங்காட்சியகத்தைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவர். அருங்காட்சியகம் மேம்படுத்தப்பட்டவுடன் ஊடகங்கள் வாயிலாக பார்வையிடும் நேரம் அறிவிக்கப்படும்.





வைத்தியகலாநிதி
த.சத்தியமூர்த்தி
பணிப்பாளர்,
போதனா
வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 13

பரமசாமி பஞ்சாட்சரம்

கிரி வலம் வரும் நடைபாதை ஏற்றமும் இறக்கமும் கொண்ட மலைப் பிரதேசத்தில் இருக்கிறது.

**யாத்திரையும் இறை அருளும்**

ஒருவர் யாத்திரை செல்ல வேண்டுமானால் அவருக்குப் பெற்றோர் வாழ்த்தும் பெரியோர் வாழ்த்தும் நல்ல நெஞ்சங்களின் வாழ்த்தும் குருவினுடைய வாழ்த்தும் இருந்தால் அவருக்கு யாத்திரைக்குரிய இறையருள் கிடைக்கும் என்பது சான்றோர் வாக்கு. எனக்கும் எனது துணைவியாருக்கும் சென்ற ஆடிப் பௌர்ணமியில் கயிலை மலையானைத் தரிசிக்கும் பெரும்பாக்கியம் இறை அருளாற் கைகூடியது.

**எமது யாத்திரையும் வேண்டுதலும்**

கயிலை சென்று வர வேண்டும் கயிலை மலையானைக் கண்டு தொழ வேண்டும் என்ற எண்ணம் எமது ஆழ் மனதிலே பல வருடங்களாக இருந்தாலும், கடந்த இரண்டு வருடங்களாக இறைவனின் அற்புதத்தை நேரிற் பார்த்தே தீர வேண்டும் என்ற ஆவல் எமது மனங்களிலே ஏற்பட்டது. நானும் எனது துணைவியாரும் 2012 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வட இந்தியப் புனித யாத்திரை சென்றிருந்தோம். அப்போது காசிக்கும் சென்று கடமைகள் செய்து ரிசிகேஸ் தயானந்த ஆச்சிரமத்தில் எட்டு நாட்கள் வரை தங்கியிருந்த போது காசியையும் கயிலையையும் பற்றி உயர்ந்த கருத்துக்களை அறிந்தோம்.

காசிப் புனித யாத்திரை மேற்கொண்டதால் காசித் தலத்தின் மகிமையை அறிந்தும் அருளை உணர்ந்தும் அருள் பெற்றவர்களின் அறிவுரைகளைக் கேட்டும் நான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களும் அறிந்து பயன்பெறும் வண்ணம் அவற்றை உள்ளடக்கிய சொற்பொழிவுகள் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. அதைத் தொடர்ந்து புனித காசியாத்திரையும் எனது அனுபவங்களும் என்னும் ஒரு நூலைப் பிரசுரித்துப் பலரும் பயன் பெறும் செயலை இறைவன் அருளால் நிறைவேற்றினேன். இவ்வேளையில் கயிலாயத்தைப் பற்றிய செய்திகளை மேலும் அறிந்தோம்.

படம் / Picture 12) கிரிவல வாசலில் யாத்திரிகர்கள் / Pilgrims at the Entrance of 'Parikrama' Circumambulation.



எங்களுக்குக் கயிலாயம் செல்ல வேண்டும் என்ற அவா தோன்றியது. எமது பிள்ளைகளின் உதவியும் உறவினர்களின் ஊக்குவிப்பும் நண்பர்களின் ஆலோசனைகளும் எமக்கு உற்சாகம் தந்தன, இந்த யாத்திரை எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை அறிந்திருந்தும் நாம் திடமாகத் தீர்மானித்தபடி கயிலை யாத்திரைக்குச் செல்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்துவந்தோம்.

**யாத்திரையால் ஏற்படும் மாற்றம்**

கயிலாச யாத்திரைச் செய்து வந்த சாதாரணமான ஒருவருக்கு அங்கு பெற்ற அருளினால் அவருள் இருக்கும் கிலேசம் அல்லது பிரமை நீங்கி மனசாந்தி ஏற்படும் என்பது பொதுவான நம்பிக்கை. இதனால் அவரது எதிர்கால வாழ்க்கை நல்ல முறையில் அமையும் என்று பகவான் சங்கரசர்மா சுவாமி எழுதியுள்ளார்.

யாத்திரை சென்று திரும்பியவர்களில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி பெரியோர்கள் பலர் ஆராய்ந்து எழுதியுள்ளனர்.

சாதாரண மக்களுக்கும் ஆன்மீக வாழ்க்கையை ஆரம்பிக்கும் சுவாமிகளுக்கும் பல வருடங்கள் சுவாமிகளாக இருப்பவர்களுக்கும் வெவ்வேறாக எழுதியுள்ளனர்.

(தொடரும்)

# எம்.பிக்கள் கொள்வனவு

## மகிந்த அணி விசனம்

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழு நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே இந்தக் குழுவின் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார மற்றும் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர்களை பணத்திற்கு கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் முயற்சி தொடர்பில் தற்போது தகவல் வெளியாகியுள்ளதாக தெரிவித்தனர். (இ)

# பல கொலைகளுடன் தொடர்புடைய 'சரா மல்லி' பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பல கொலைகளுடன் தொடர்புடைய சரா மல்லி என்றழைக்கப்படும் சரத் பண்டார என்ற பாதாளக் குழு தலைவர் ஒருவர் பொரலஸ்கமுவையில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கட்டாரில் தங்கியிருந்து விட்டு இலங்கை வந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போது தெரிவித்தார்.

சந்தேகநபர், மாகந்துர மதுஷ், அங்கொட லொக்கா உள்ளிட்ட பாதாள குழுவினருடன் நெருங்கிய தொடர்புடையவர் என்றும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு பொலரஸ்கமுவ பகுதியில் இரண்டு பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டமை, மத்துகம, அளுத்கம, வெலிப்பன்ன, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபருக்கு எதிராக, மத்துகம மற்றும் களுத்துறை நீதவான் நீதிமன்றங்களில் 5 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யோஷித வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு, ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.ஆர். ஐயன்தொட்டுவ நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.




எதிர்வரும் 12ஆம் திகதி வரை இவ்வாறு சுற்றுப்பயணம் செய்வதற்கு, மேல்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதுடன், தற்போது, நீதிமன்றத்தின் பொறுப்பில் உள்ள அவரது வெளிநாட்டு கடவுச்சீட்டினை வழங்குவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# உதயங்க வீரதுங்கவின் மாமியின் வங்கிக் கணக்கு விபரங்களையும் வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பாரிய நிதி மோசடி தொடர்பான பிரதான சந்தேக நபரான ரஷ்யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் மாமியாரின் இரண்டு வங்கிகளிலுள்ள கணக்குகளின் விபரங்களை நிதி மோசடிப் பிரிவுக்கு வழங்குமாறு, குறிப்பிட்ட வங்கி முகாமையாளர்களுக்கு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.



நிதி மோசடி விசாரணைப் பிரிவு சார்பில் சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நீதவான் நேற்று முன்தினம் இவ்வாறு உத்தரவிட்டார்.

உதயங்க வீரதுங்கவின் மாமியாரின் ஒரு வங்கிக் கணக்கிலிருந்து 20 மில்லியன் ரூபாவை வேறு வங்கிகளுக்கு மாற்றியுள்ளதாகவும் இக் கணக்குகளின் விபரங்கள் மேலதிக விசாரணைகளுக்கு தேவை என்றும் நிதி மோசடிப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

அத்துடன் உதயங்க வீரதுங்க, பல்வேறு நாடுகளில் வங்கிக் கணக்குகளை வைத்திருப்பதுடன் அவற்றில் பாரியளவில் பணம் வைப்பிலிட்டிருப்பதும் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளதென்றும் நிதி மோசடிப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் மிக் விமான கொள்வனவின் ஊடாக சுமார் 1072 மில்லியன் ரூபாவை மோசடி செய்துள்ளதுள்ளதாகவும் ஐக்கிய அரபு இராச்சியம், பிரான்ஸ், பனாமா உட்பட பல நாடுகளிலிருந்து தேவையான தகவல்கள் கோரப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் சைப்பிரஸ், லித்துவேனியா போன்ற நாடுகளிலிருந்து இதுவரை தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உதயங்க வீரதுங்க, நிதிக் கையாடல் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்ட சட்டமா அதிபர் திணைக்களம், உதயங்கவின் வங்கிக் கணக்குகள் சிலவற்றை இடைநிறுத்த உத்தரவு பெறப்பட்டுள்ளதாகவும் காணி மற்றும் 3 சொத்துக்களை விற்பனை செய்யவோ, கைமாற்றவோ, முடியாதவாறு நீதிமன்றத்தினூடாக தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகள் தொடர்பான அதிகளவிலான வங்கிக் கணக்குகள் உட்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இவை தொடர்பாகவும் விரிவான விசாரணைகள் நடைபெறுவதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# புரிந்துணர்வு உடன்படிக்கை

(கொழும்பு)

இஸ்லாமாபாத் தொழில் அபிவிருத்தி பேரவையும் இலங்கை தகவல் தொழிற்றுறை பேரவையும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டுள்ளன.

இரு நாடுகளுக்கிடையில் தொழிற்றுறை அபிவிருத்தியை மேற்கொள்வதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். இதனடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையில் பயிற்சி கற்கை நெறிக்கான நிகழ்ச்சி நிரல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையில் வெற்றிகண்டுள்ள கல்வி மூலமான தொழில் பயிற்சி குறித்த அனுபவங்களை பாகிஸ்தான் இதனூடாக பெற்றுக் கொள்ளமுடியும் என்று இஸ்லாமாபாத் தொழில் அபிவிருத்தி பேரவையின் கொள்கையை முன்னெடுப்பவர் தெரிவித்துள்ளார். (இ-7)



சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நாவலர் தின பெருவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

# மாணவனுக்கு நிதியுதவி

(கிரணவாய்)

கரவெட்டி பிரதேச சமூக சேவைப் பிரிவினரால் கர வெட்டி பிரதேச செயலர் ரஜீப், சமூக சேவை உத்தி யோக த்தர் ஸ்ரீபாஸ்கரன் முன் னிலையில் வறுமைக்கோட் டின் கீழ் உள்ள மாணவன் ஒருவருக்கு கற்றல் உபகர ணாங்கள் வாங்குவதற்கு 5770 ரூபா பணம் வழாங் கப்பட்டது. (இ-60)



# தமிழ்க் கட்சிகள் தனித்து ஆட்சியமைக்கவே ஆதரவு

## கருணா கூறுகிறார்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட த்தில் தமிழ்க் கட்சிகள் தனி த்து ஆட்சியமைக்க வேண் டும் என்பதற்காக தமது கட்சி ஆதரவினை வழாங்கியு ள்ள தாக தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவ ரும், முன்னாள் பிரதியமை ச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட த்தின் மண்முனை தென் எருவில்பற்று, போரதீவு ப்பற்று, பட்டிப்பளை ஆகிய பிர்தேச சபையில் ஆட்சி யினை அமைப்பதற்கு தமது கட்சி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு ஆதரவினை வழ ங்கியுள்ளதாக நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது இதனைத் தெரிவித்தார்.

தேசியக் கட்சிகள் தமிழ்ப் பகுதிகளில் ஆட்சியமைப்ப தினை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்த அவர், தமிழ் பகுதிகளில் தமிழ்க் கட்சிகள் தனித்து ஆட்சியமைப்பதற்கு தமது கட்சி ஆதரவு வழாங் கும் என தெரிவித்தார்.

இந்நிலையில், போரதீவுப் பற்று பிரதேசசபையின் ஆட்சி யினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி கொள்வ தற்கு காரணமாக விநாயக மூர்த்தி முரளிதரனின் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி யின் போரதீவுப்பற்று உறுப்பி னர்விக்னேஸ்வரனின்ஆதரவே முக்கியமானதாக இருந்த மை யும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புத்தாண்டை முன்னிட்டு நேரக்கட்டுப்பாடு தளர்வு

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொழில் நிலையம் திறந்து தொழில் புரிவதற்கு அனுமதி வழங்கப்படுவதோடு 8 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இரவு நேரக் கட்டுப்பாடு தளர் த்தப்படுவதோடு 14 ஆம் திகதி யிலிருந்து வழமையான நேரக்கட்டுப்பாடு அமுலில் இருக்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

இதனை மீறி நடப்பவர் கள் மீது ஒன்றிய யாப்பிற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட சிகை ஒப்பனையா ளர் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ

# பெருந்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.அத்தியடி ஸ்ரீ சித ம்பர நடராஜா வீரகத்திப் பிள்ளையார் கோவில் பெருந் திருவிழா நாளை வெள்ளி க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற் றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா இடம்பெற்று எதிர் வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் தேர்த் திரு விழாவும் மறுநாள் ஞாயிற் றுக்கிழமை தீர்த்தத் திருவி ழாவும் இடம்பெறும். (இ)

# பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அரசடி ஞான வைரவர் திருக் கோயில் வருடாந்த அலங் கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் நாளை மறுதினம் சனிக் கிழமை பிற்பகல் 4 மணிய ளவில் அறவொளி கலையர ங்கத்தில் அறவொளி சன சமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமை யில் இடம்பெறும். இந் நிகழ் வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப் பினர் இ.ஜெயசேகரம், சிறப்பு விருந்தினர்களாக கொக்கு வில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியசாலை அதிபர் நடராசா கந்தவனச் செல் வன், மானிப்பாய் சென் அன் ரனிஸ் றோமன் க.த. பாட சாலை ஆசிரியை திருமதி ஜீவமலர் மகிழ்ராயதுரை, கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை அதிபர் குமார சாமி அகிலன்,நல்லூர் பிர தேச சபை உறுப்பினர் பத்ம நாதன் மயூரன், யாழ். மாந கரசபை உறுப்பினர் ஜெய ந்தினி நாகேஸ்வரன் ஆகி யோர் கலந்து கொள் வர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1377

Search for people, places and things | Nagendram Home

## அனோஜன்

உண்மையான நண்பர்கள் நம்முடைய மகிழ்ச்சியை இரு மடங்காக மாற்றுகிறார்கள்



அதேவேளை துன்பத்தை அரைப்பங்காகக் குறைத்து விடுவார்கள்...!

## அனிஸ்ரன்

புகுந்த வீட்டில் நடந்துகொள்ளும் முறையை பெண்ணுக்குப் போதிக்கும் சமூகம்



மனைவியின் குடும்பத்தாரை எப்படி நடத்துவது என ஆணுக்குப் போதிப்பதில்லை!

## அனோசா

மின்சாரம் இல்லாத போது தேடப்படும் மெழுகுவர்த்தி போலவே



தேவைப்படும் போதே சிலர் நம்மைத் தேடுகின்றனர்

## அகிதன்

பல சொந்தங்கள் இருந்தாலும் ஆணுக்கு மனைவிதான்... பெண்ணுக்கு கணவன்தான்



விழுதுகள் மரத்தைத் தாங்கலாம். வேர் மட்டுமே அதை வாழ வைக்கும்...!

## அச்சுதன்

உன் வாழ்க்கையில் எந்த ஒரு பிரச்சினையையும் சந்திக்காமல் செல்லும் போதே



சிந்தித்துக்கொள் நீ செல்லும் பாதை தவறானது என்று...!

## அகிதா

முந்திக்கொண்ட முதல் செங்கல் கோவிலின் அடியில் நின்று விடும்



காத்திருந்த கடைசி செங்கல்தான் கலசத்தைத் தொடும். சாதிக்கப் பொறுமை அவசியம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அகவை 40 இல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் அகவை நாற்பதின் நிறைவுக்கும் அதையொட்டி நடைபெறும் மருத்துவக் கண்காட்சிக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்கலைக்கழகப் பீடம் ஒன்றின் நாற்பது வருட இருப்பு குறுகிய காலமாக இருப்பினும் எமது பிரதேசத்தில் நிலவிய யுத்த சூழ் நிலையிலும் பீடத்திற்குத் தேவையான ஆளணி மற்றும் வளப் பற்றாக்குறையிலும் மற்றும் பல்வேறு நெருக்கடிகள் நெருக்குவாரங்கள் மத்தியிலும் பல்கலைக்கழக நிர்வாகமும் மருத்துவ பீடமும் சிறப்பாக இயங்கியது பாராட்டுக்குரியது. ஒரு கட்டத்தில் இப்பீடத்தை இடம் மாற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்தும் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.

''வருமுன் காப்போம்'' என்னும் இலக்குடன் மருத்துவக் கண்காட்சி மக்களுக்கு அறிவையும் விழிப்புணர்வையும் கொடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவ அறிவை சமூகத்திற்கு எடுத்துச் செல்லும் Out reach முயற்சியாக இதனைப் பார்க்கலாம்.

மருத்துவ பீடத்தின் அகவை நாற்பது நிறைவில் பீடத்தின் ஆரம்பத்தையும் அது எதிர் நோக்கிய சாதக, பாதக நிலைமைகளையும் இன்று எண்ணிப் பார்ப்பது பொருத்தமாகும்.

1977 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் முன்னைய ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தன 4/5 பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்து சிறந்த பொருளாதாரக் கொள்கையை முன்னெடுத்தார். இவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு பல்கலைக்கழகமும் அதனுடன் இணைந்த வளாகங்களும் என்ற நிலையை மாற்றி மானிய ஆணைக்குழுவையும் (UGC) தனித்தனியான பல்கலைக்கழகங்களையும் நிறுவுவதாக உறுதியளித்தார். மேலும் முதன் முதலாக உயர் கல்விக்குத் தனியான அமைச்சு நிறுவப்பட்டதுடன் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே உயர் கல்வி அமைச்சின் செயலாளராகவும் தொடர்ந்து மானிய ஆணைக்குழுவின் தலைவராகவும் விளங்கினார். மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த அன்றைய அமைச்சராக இருந்த திரு. றொனி டி மெல் றுகுணு வளாகத்தில் மருத்துவ பீடம் அமைக்க முயற்சி எடுத்தார். இந்நிலையில் அன்று யாழ்ப்பாண வளாகத் தலைவராக இருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ அ. அமிர்தலிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்தில் மருத்துவ பீடம் அமைக்க எடுத்த முயற்சியை அரசு ஏற்று காலியிலும் யாழ்ப்பாணத்திலும் மருத்துவ பீடங்களை நிறுவத் தீர்மானித்தது.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் புதிய கட்டடங்கள் கட்டி மருத்துவ பீடத்தை ஆரம்பிக்கக் காத்திராது கைதடியில் இருந்த சித்த ஆயுர்வேத மருத்துவத் துறையின் கட்டடத்தொகுதியில் 1978 ஒகஸ்ட் 7 ஆம் திகதி முதலாவது மருத்துவ அணி மாணவர்கள் எழுபது பேரை மருத்துவக் கற்கை நெறிக்கு அனுமதித்தார். இந்நிகழ் வில் அன்றைய உயர் கல்வி அமைச்சர் திரு.நிசங்க விஜயரெத்தினா அவர்கள் கலந்து கொண்டார். 01.01. 1979 இல் யாழ்ப்பாண வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாகியது. மேலும் 01.01.1979 இல் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் நியமிக்கப்பட்டார்.

மருத்துவ பீடத்திற்குத் தேவையான கட்டடங்களை அமைப்பதற்கு திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் அதற்குரிய காணியைப் பெற்று அன்று கட்டடக் கலையில் புகழ் பெற்று இருந்த திரு.V.S. துரைராசா அவர்களால் பீடக் கட்டடத் தொகுதி வடிவமைக்கப்பட்டு வெற்றிவேல் மனோகரன் நிறுவனத்தால் பிரதான கட்டடத் தொகுதி கட்டி முடிக்கப்பட்டது. பேராசிரியர் கூவர் கலையரங்கம், தொழில்நுட்பப் பிரச்சினையாலும் நிதி நெருக்கடியாலும் கட்டடப் பொருட்கள் பற்றாக்குறைகளாலும் கட்டி முடிக்க நீண்ட காலம் எடுத்தபோதும் இன்று அது ஒரு அழகான கலையரங்கமாக விளங்குகின்றது. மருத்துவ பீடம் இன்று பல கட்டடங்களை திருநெல்வேலி வளாகத்தில் கொண்டு இருப்பதுடன் போதனா வைத்தியசாலை அருகில் ஒரு பெரும் மாணவ விடுதிகளையும் கொண்டுள்ளது. மேலும் மருத்துவப் பயிற்சி சார்ந்த (Clinical Departments) துறையினருக்கான பெரிய தொரு கட்டடத் தொகுதி போதனா வைத்தியசாலைக்கு அருகில் அமைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

மருத்துவ பீடத்தின் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க கொழும்புப் பல் கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் A.A. கூவர் அவர்கள் முதல் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். இவருடன் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பணியாற்றிய பேராசிரியர்களான C.சிவஞானசுந்தரம், M.சிவசூரியா மற்றும் கலாநிதிகள் செல்வி. கங்கா பாலசிங்கம், S.V. பரமேஸ்வரன், டாக்டர்.P. அம்பிகாபதி ஆகியோர் மருத்துவ பீடத்தில் இணைந்ததால் பீடம் ஆரம்பத்தில் இருந்தே புது வேகத்துடன் (Jump start) இயங்கத் தொடங்கியது.

இந்நிலையில் புகழ்பூத்த பேராசிரியர் R.கனகசுந்தரமும் பீடத்தில் இணைந்தது பீடம் மேலும் வலுப்பெற லாயிற்று. இவர்களைத் தொடர்ந்து சிறந்த கல்வித் தகைமை பெற்றோர் விரிவுரையாளர்களாகவும் பேராசிரியர்களாகவும் பீடத்தில் இணைந்தனர்.

1980 களின் ஆரம்பத்தில் மருத்துவ பீடத்தில் எல்லாத் துறைகளுக்கும் பேராசிரியர்களும் சிரேஷ்ட விரவுரையாளர்களும் இருந்தனர்.

உடற்கூற்றியல் பேராசிரியர் R.கனகசுந்தரம், உடற்றொழியியல் பேராசிரியர் S.V. பரமேஸ்வரன், உயிர் இரசாயனவியல் பேராசிரியர் A.A. கூவர், பின் பேராசிரியர் R. இராமசாமி, பின் பேராசிரியர் K.பாலசுப்பிரமணியம், சமூக மருத்துவப் பேராசிரியர் C.சிவஞானசுந்தரம் , சட்ட மருத்துவப் பேராசிரியர் N. சரவணபவானந்தன், மருந்தியல் பேராசிரியர் திருமதி T.சரவணபவானந்தன், நோயியல் பேராசிரியர் C.C.பாலசுப்பிரமணியம், மருத்துவப் பேராசிரியர் N.சிறிகரன், குழந்தை வைத்தியம் பேராசிரியர் D.ராமதாஸ், அறுவைச் சிகிச்சை பேராசிரியர் S.கருணைநாதன், பெண்நோயியலும் மகப்பேற்றியலும் பேராசிரியர் M.சிவசூரியா, உளநோய் மருத்துவப் பேராசிரியர் T.கணேஸ்வரன், பின் பேராசிரியர் D.சோமசுந்தரம் ஆகியோர் இருந்தனர். மிகச் சிறந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் குழாமைக் கொண்ட பீடம் முதல் ஐந்து வருடத்தில் மிக்க உச்ச நிலையைத் தொட்டது.

1981 இல் யாழ்ப்பாண மாவட்ட சபைச் தேர்தலுடன் ஏற்பட்ட அனர்த்தங்கள், 1983 ஜூலைக்கலவரங்கள், அதன் பின் வடபகுதியில் ஏற்பட்ட ஆயுதப் போராட்டங்களின் விளைவாக மருத்துவ பீடப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பீடத்தை விட்டு விலகிச் செல்லலானார்கள். பீடம் மிகக் குறுகிய காலத்தில் முன்னணிப் பேராசிரியர் கள், விரிவுரையாளர்களை இழந்ததுடன் பௌதீக வளங்கள் மற்றும் அடிப்படையான தடையற்ற மின்சார வசதியையும் இழந்தது.

இந்நிலையில் யாழ்ப் பாணப் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் மருத்துவ பீட இயக்கத்திற்குப் பெரிதும் உதவினர். வைத்திய நிபுணர்களான டாக்டர்கள் பொன்னம்பலம் கிருஷ்ணராசா, சேவியர், கணேசரெத்தினம், ஜெயரட்ணம், சிவகுமார், ஆனந்தராசா, திருமதி நாகேந்திரா, குழந்தை வைத்திய நிபுணர் சிவபாதசுந்தரம் என பட்டியல் நீண்டு செல்லும்.

1995 ஒக்டோபர் 30 இல் வலிகாமம் மக்களின் இடப்பெயர்வுடன் மருத்துவபீடச் செயற்பாடுகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. இந்நிலையிலும் சாவகச்சேரியில் மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சை இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

1996 மே 13இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் மீளவும் இயங்கத் தொடங்கியது. இடப்பெயர்வுக் காலத்தில் பல்கலைக்கழக வளாகம் பெரும் பாதிப்புக்குட்பட்டு இருந்தது. வலிகாமத்தை இருபகுதிகளாக பிரிக்க அமைக்கப்பட்ட மண் அணை பல்கலைக்கழக விளையாட்டு மைதானம் மற்றும் மருத்துவ பீடத்தை ஊடறுத்துச் சென்றது. அணைக்கு மேற்காகவுள்ள பகுதி ஓரளவு விடு விக்கப்பட்ட பகுதி semi cleared area என்றும் கிழக்குப் பகுதி விடுவிக்கப்பட்ட பகுதி cleared area எனவும் சொல்லப்பட்டது. இரு பகுதிகளுக்கும் இடையே செல்லும் பாதை மருத்துவ பீடத்திற்கு முன்னால் அமைந்திருந்தது.

மிகக் கடின உழைப்பால் குறுகிய காலத்தில் மருத்துவ பீடப்பகுதியில் இருந்து கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு கட்டடங்கள் திருத்தப்பட்டு 1996ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பீடம் மீள இயங்கத் தொடங்கியது. அன்று யாழ்ப்பாணத்துக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் கடல் வழியாகவோ, வான் வழியாகவோ தான் மிகவும் சிரமத்திலும் கூடிய செலவிலும் பயணிக்க முடியும். இச் சூழ்நிலையில் அர்ப்பணிப்பான சிறு எண்ணிக்கையிலான விரிவுரையாளர்களாலேயே மருத்துவ பீடக் கல்விச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், டாக்டர் திருமதி ஜே. கணேசமூர்த்தி, டாக்டர் திருமதி வி.எம். கருணாகரன், டாக்டர் என். சிவராஜா, டாக்டர் குணராஜசிங்கம் ஆகியோர் இக்காலப் பகுதியில் கடமையாற்றியவர்கள், பாராட்டுக்குரியவர்கள்.

1997 இல் டாக்டர் வி. குணானந்தன் அதிதி பேராசிரியராக/ விரிவுரையாளராக இணைந்து மருத்துவக் கல்வியை முன்னெடுக்க, தக்க வைக்க சிறந்த பணியாற்றினார் என்பது நினைவுகூரத்தக்கது.

2010 இல் யுத்தம் முடிவடைந்ததும் இப் பிரதேசத்தின் இயல்பு வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படலாயிற்று. போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு துறைகளில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பொருட் பற்றாக் குறைவுகள் நீங்கின. இச்சூழ் நிலையில் மருத்துவ பீடத்திற்கு விரிவுரையாளர்கள் பலர் நியமனம் பெற்றனர். இன்று மருத்துவ பீடத்தில் கல்விசார் ஆளணிப் பற்றாக்குறைவு மிகக் குறைந்துள்ள போதும், இன்னமும் சிரேஷ்ட பேராசிரியர் ஒருவரையே பீடம் கொண்டுள்ளது. இந்நிலை மாறி பல துறைகளுக்கும் பேராசிரியர்கள் இருக்க வேண்டும். இருப்பின் கல்விச் செயற்பாட்டைச் சிறப்பாக முன்னெடுப்பதுடன் உரிய அங்கீகாரமும் கௌரவமும் கிடைக்கும்.

1987 இல் ஜப்பான் அரசாங்கம் பேராதனை, கராப்பிட்டி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மருத்துவ பீடங்களுக்கும் போதனா வைத்தியசாலை அமைக்க முன்வந்தது. பேராதனையிலும், கராப்பிட்டியிலும் போதனா வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டு விட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் அன்று நிலவிய சாதகமற்ற சூழ்நிலைமையால் அமையவிருந்த போதனா வைத்தியசாலை கனவாகப் போய் விட்டது. தற்பொழுது போதனா வைத்தியசாலை அமைக்கும் எண்ணக்கரு அரசால் கைவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை இன்று பல துறைகளிலும், பௌதீக, மருத்துவ ஆளணி, வைத்திய சேவை நிலைகளில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இன்றைய பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தியின் பணிகள் பாராட்டுக்குரியன.


1990களில் மிகவும் கஷ்டகாலத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளராக கடமையாற்றிய டாக்டர் செல்வி. நவமணி கனகரட்ணம் அவர்களின் பணி மிகவும் சிறந்து விளங்கியது. 1995 இல் இடம் பெயர்ந்த யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையை 1996 இல் அதே இடத்தில் மீளவும் விடுதிகளுடன் இயக்கி வைத்த பெருமை இவருக்குரியது.

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் படித்து இதுவரை 34 அணியினர் வெளியேறியுள்ளனர். ஆரம்ப காலங்களில் மாணவர் அனுமதி 70 பேரில் தொடங்கி பின்னர் 100 ஆக அதிகரித்து அண்மைய ஆண்டுகளில் 150 ஆக அதிகரித்துள்ளது. இங்கு கற்று வெளியேறிய மருத்துவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் குறிப்பாக அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்காவிலும் சிறந்த வைத்தியர்களாகவும், நிபுணர்களாகவும், கடமை புரிவது பீடத்துக்கு பெருமையாகும். இப் பல்கலைக்கழக மாணவியாய் இருந்த போது மருத்துவக் கல்வியில் சிறந்து விளங்கிய டாக்டர் செல்வி சாளினி ஸ்ரீரங்கநாதன் இன்று கொழும்பு மருத்துவ பீடத்தில் பேராசிரியராக இருப்பது மருத்துவ பீடத்திற்கு பெருமை சேர்ப்பதாகும்.

யாழ்ப்பாண மருத்துவ பீடம் கடந்த 40 வருடங்க ளில் பல பிரச்சினைகளை எதிர்கொண்ட பொழுதும் மருத்துவக்கல்வியின் தரம் உயர்வாகவே இருந்து வருகின்றது. பட்டப் பின் கல்வியில் யாழ்ப்பாண மருத்துவ பீட மாணவர்களின் பெறுபேறுகள் இதனை நிரூபிக்கின்றன. துணைவேந்தர் பேராசிரியர் S. வித்தியானந்தனிலிருந்து துணைவேந்தர்களாக கடமையாற்றிய பேராசிரியர் A. துரைராசா, பேராசிரியர் K. குணரட்னம், பேராசிரியர் P.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் S. மோகனதாஸ், பேராசிரியர் R. கூல், பேராசிரியர் R.குமாரவடிவேல், பேராசிரியர் N. சண்முகலிங்கம், பேராசிரியர் செல்வி V.அரசரெத்தினம் மற்றும் இன்றைய துணைவேந்தர் பேராசிரியர் R. விக்கினேஸ்வரன் ஆகியோர் மருத்துவபீட வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வந்துள்ளனர். இதேபோல மருத்துவ பீடாதிபதியாக இருந்த பேராசிரியர்களான கூவர், வி.கனகசுந்தரம், S.சிவஞானசுந்தரம், K.பாலசுப்பிரமணியம், S.V. பரமேஸ்வரன், டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், பேராசிரியர் செல்வி வசந்தி அரசரெத்தினம், பேராசிரியர் K.சிவபாலன் கலாநிதி S. பாலகுமார் தற்போதைய பீடாதிபதியான டாக்டர் S.ரவிராஜ், யாவரும் அபிவிருத்தியை கடினசூழ்நிலையில் முன்னெடுத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவ பீடமாணவர்களின் நலனுக்காகப் பெருமளவு பண உதவிகளை செய்த உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் அன்பர்கள் பாராட்டிற்கும் நன்றிக்குமுரியவர்கள்.

இம் மருத்துவபீடம் என்றும் மங்காப் புகழுடன் மருத்துவக் கல்வியையும், ஆராய்ச்சிகளையும், சமூக செயற்பாடுகளையும் முன்னெடுத்து முன்னிலை நிறுவனமாக செயற்பட வேண்டும் என்பதே எம் யாவரதும் எதிர்பார்ப்பாகும்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

# மாகாண சபை உறுப்பினர் கசுனுக்கு நேற்றுப் பிணை



(கொழும்பு)

தென் மாகாண சபை உறுப்பினர் எம்.கே கசுன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொஸ்வத்த பகுதியில் தனியார் பேருந்து ஒன்றின் சாரதியை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த இருவரையும், கடுவெல நீதவான், மேலதிக மாவட்ட நீதிபதி பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்திய போது, இந்தப் பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, ஒருவருக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## சந்திரிகா தெரிவிப்பு

(கரணவாய்)

போரால் சீரழிந்த வடக்கு-கிழக்குபகுதிகளில்மதுவேலைத் திட்டங்களை செய்து வரும் அதேவேளை கடந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

மணற்காட்டில் அமைக்கப்பட்ட மீன் சந்தைக் கட்டடத்தை கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது செயலணியூடாக இவ்வாறான பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். அந்த வகையில் கடந்த இரண்டு வருடங்களாக 500 இற்கு மேற்பட்ட வேலைத் திட்டங்களைமுன்னெடுத்துள்ளோம். பாடசாலைகளில் பாதை அமைத்தல், சுகாதார வேலைகள், குளங்கள் அமைத்தல் என செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளோம். 160 குளங்களை சீரமைப்பதற்கான நடவடிக்கைகள்எடுத்துள்ளோம்.

எனது நண்பன் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஊருக்கு வந்துள்ளேன். அவர் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முயற்சி எடுத்து வருகிறார். அது மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுத்து வருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)



தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் ஏற்பாட்டில் மணற்காட்டில் அமைக்கப்பட்ட மீன் சந்தை கட்டடத் திறப்புவிழா கடந்த திங்கட்கிழமை மாலை மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்வதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மகாலிங்கம்)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் வெற்றிபெற வேண்டி விசேட பூஜை வழிபாடு





(ஹற்றன்)

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டி ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு நேற்றுக் காலை இடம்பெற்றது.

பிரதமருக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னிட்டு நேற்றுக் காலை 9 மணி முதல் விவாதம் இடம்பெற்றுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்க வெற்றியடைய வேண்டி இடம்பெற்ற வழிபாட்டில் ஹற்றன் டிக்கோயா நகரசபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புத்தர் சிலையுடன் நால்வர் சிக்கினர்

## புசல்லாவையில் சம்பவம்!

(கொழும்பு)

புராதன உரிமம் உடைய 7 தலை நாகத்தை கொண்ட புத்தர் சிலையுடன் சந்தேக நபர்கள் நால்வர் நேற்று முன்தினம் இரவு புசல்லாவை பிரதேசத்தில் ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்த புசல்லாவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

புசல்லாவ பிரதேசத்தில் ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்த புசல்லாவ பொலிஸ் நிலைய அதிகாரிகளால், நேற்று முன்தினம் இரவு சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த காரொன்றினை தடுத்து பரிசோதனை க்குட்படுத்திய வேளையில், காரினுள்ளிருந்துபுராதனஉரிமம்உடைய 7 தலை நாகத்தை கொண்ட புத்தர் சிலையொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த காருடன் சந்தேகநபர்கள் நால்வரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது, 30, 35 மற்றும் 40 வயதுகளை உடைய மாவத்தகம, எய்யந்துடுவ, நிட்டம்புவ மற்றும் கொத்மலையைச் சேர்ந்த ஆண்கள் நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கைதுசெய்யும் வேளையில் இவர்களிடமிருந்து புராதன உரிமம் உடைய ஏழு தலை நாகத்தை கொண்ட புத்தர் சிலையுடன், சந்தேக நபர்கள் பயணித்த கார் மற்றும் அசிட் போத்தல்கள் இரண்டும்கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் குறித்த சந்தேக நபர்கள் நால்வரும் நேற்று கம்பளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புசல்லாவை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம் செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7424

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 37
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/அரச தொழில்
தொ.இ: B/7425

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 56 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc BIT/அரச தொழில்
தொ.இ: B/7426

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA/ அரசதொழில்
தொ.இ: B/7427

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திம்: உத்தரம்
கி.பா: 49
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4073

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 36
உயரம்: 162cm
தகைமை/தொழில்: BFA
தொ.இ: G/4087

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 19 செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSc லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4089

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 62 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Civil Eng
தொ.இ: G/4096

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.






# இறை பக்தி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் பலராமரும் மதுராவின் வீதிகளில்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தபோது சுதாமா என்ற பெயருடைய பூக்கடைக் காரரிடம் சென்றார்கள். அவர்கள் கடையை அணுகியதும் பூ வியாபாரி வெளியே வந்து மிகுந்த பக்தியுடன் அவர்களின் காலில் விழுந்து வணங்கினார். பின், கிருஷ்ணரையும் பலராமரையும் தகுந்த ஆசனங்களில் இருக்கச் செய்து, உதவியாளர்களைப் பூவும் தாம்பூலமும் கொண்டு வரும்படி பணித்தார். வியாபாரியின் வரவேற்பால் கிருஷ்ணர் மிகவும் திருப்தி அடைந்தார்.

மிகுந்த பணிவுடன் பூ வியாபாரி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பிரார்த்தித்தார். அன்பான பிரபுவே, நீர் என் இருப்பிடத்துக்கு வந்திருப்பதால் என் மூதாதையர்களும், வணக்கத்துக்குரிய பெரியவர்களும் முக்தி அடைந்தவர்களாக வேண்டும். இப் பிரபஞ்சத்தில் காரணங்களுக்கெல்லாம் காரணமானவர் நீரே.

ஆனால் உமது பக்தர்களைப் பாதுகாத்து, அசுரர்களை அழித்து, இவ்வுலக வாசிகளுக்கு நன்மையளிப்பதற்காக உமது சக்திகளுடன் நீர் வந்திருக்கிறீர். நண்பரென்ற முறையில் எல்லா உயிர்களையும் சமமாக நோக்குகிறீர். நீர் பரமாத்மா. நண்பன்-பகைவன் என்ற வேறுபாடு உமக்கில்லை. என்றாலும் உமது பக்தர்களுக்குப் பக்தியில் சிறப்புப் பலன்களை நீர் வழங்குகிறீர். பிரபுவே, நான் என்ன செய்ய வேண்டும், கட்டளையிடும். நான் உமது நிரந்தர சேவகன். ஏதாவது செய்ய நீர் அனுமதித்தால் நான் தன்யனாவேன். இவ்வாறு சுதாமா பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பிரார்த்தித்தார்.

கிருஷ்ணரும் பலராமரும் தன் இருப்பிடத்தில் வரப்பெற்ற சுதாமா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அதனால் தனக்கு மிகவும் பிடித்தமான மலர்களைக்கொண்டு மிக அழகாக இரண்டு மாலைகளைத் தொடுத்து அவர்களுக்கு அர்ப்பித்தார். அவருடைய உண்மையான பக்தித் தொண்டை கிருஷ்ணரும் பலராமரும் மெச்சினார்கள்.

சரணடையும் ஆத்மாக்களுக்குத் தாம் எப்போதும் வழங்கும் ஆசிகளைக் கிருஷ்ணர் சுதாமாவுக்கு வழங்கினார். சுதாமா, தாம் எப்போதும் கிருஷ்ணரின் நிரந்தர சேவகராக இருக்க வேண்டுமென்றும், அப்படிப்பட்ட பக்தித் தொண்டின் மூலம் பிற உயிர்களுக்கும் சேவை செய்ய வேண்டுமென்றும் பிரார்த்தித்தார். பூ வியாபாரியிடம் திருப்தியடைந்த கிருஷ்ணர்,

அவர் வேண்டிய வரங்களுக்கான ஆசிகளை



நல்கியது மட்டுமன்றி அதற்கும்மேலாக எல்லா சுக போகங்களையும், நீண்ட ஆயுளையும் வழங்கினார்.

தொடரும்...




❖1792-அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் முதற் தடவையாக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

❖1804-முதற்தடவையாக விண்வீழ்கல் ஒன்று வீழ்ந்தது ஸ்கொட்லாந்தில் பதிவானது.

❖1897-கிரேக்கத்துக்கும் ஓட்டோமான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.

❖1930-மகாத்மா காந்தி அரபிக் கடலின் குஜராத் கடற்கரையோரப் பகுதியான தண்டியில் உப்புச் சட்டத்தை மீறி உப்பைக் கையிலே அள்ளி எடுத்து வந்து தனது 241 மைல் நடைப் பயணத்தை முடித்தார்.

❖1955-ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியிலிருந்து வின்ஸ்டன் சேர்ச்சில் விலகினார்.

❖1956-பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் ஜனாதிபதியுடன் போரை அறிவித்தார்.

❖1956-இலங்கைப் பொதுத்தேர்தலில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுன வெற்றி பெற்றது.

❖1971-இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசிற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டின் தென் பகுதிகளில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

❖1981-தமிழீழப் போராளிகள் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோர் இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

❖1901-சு.சி.பிள்ளை, இந்தியக் கணிதவியலாளர் (இ. 1950)

❖1923-எம். சாரதா மேனன், இந்திய மனநல மருத்துவர்

❖1933-க.கைலாசபதி, இலங்கை தமிழறிஞர், கல்வியாளர், ஊடகவியலாளர் (இ. 1982)

❖1947-குளோரியா மகபகல்-அர்ரொயோ, பிலிப்பைன்சின் 14ஆவது அரசுத்தலைவர்

❖1958-லசந்த விக்கிரமதுங்க, இலங்கை ஊடகவியலாளர் (இ. 2009)

### இறப்புகள்

❖1962-ஆனந்த சமரக்கோன், சிங்கள இசைக் கலைஞர், பாடலாசிரியர் (பி. 1911)

❖1975-சங்கை செக், சீனக் குடியரசின் முதலாவது அரசுத்தலைவர் (பி. 1887)

❖1976-அங்கையன் கைலாசநாதன், ஈழத்து எழுத்தாளர், கவிஞர் (பி. 1946)

❖1993-திவ்யா பாரதி, இந்திய நடிகை (பி. 1974)

❖1994-கர்ட் கோபேன், அமெரிக்கப் பாடகர் (பி. 1967)

❖1997-அக்லிலு ஹைப்டா, எதியோப்பிய உயிரியலாளர்

❖2008-சார்ள்டன் ஹெஸ்டன், அமெரிக்க நடிகர், இயக்குநர், செயற்பாட்டாளர். (பி. 1923)

### சிறப்பு நாள்

❖குழந்தைகள் நாள் (பாலஸ்தீனம்)

❖தேசிய கடல்சார் தினம் (இந்தியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 40 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 75 | 90 | 80 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 50 | 40 | 50 | 80 | 50 |
| தக்காளி | 30 | 30 | 20 | 20 | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 20 | 30 | 30 | 40 | 40 | 60 | 80 |
| கரட் | 80 | 80 | 180 | 80 | 100 | 160 | 80 |
| பூசணி | 50 | 30 | 25 | 50 | 30 | 40 | 60 |
| புடோல் | 60 | 60 | 25 | 80 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 30 | 30 | 60 | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 120 | 140 | 150 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 50 | 55 | 70 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 30 | 120 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 40 | 35 | 50 | 50 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 55 | 50 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 60 | 40 | 30 | 50 | 30 | 60 | 100 |
| லீக்ஸ் | 150 | 200 | 110 | 120 | 180 | 200 | 120 |
| பீற்றூட் | 30 | 30 | 30 | 40 | 30 | 60 | 40 |
| குடைமிளகாய் | 80 | 50 | 30 | 50 | 60 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 200 | 200 | 250 | 300 | 500 |
| போஞ்சி | 120 | 200 | 40 | 120 | 100 | 120 | 120 |
| கத்தரிதம் பள்ளை | 50 | 30 | — | 40 | — | 50 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 180 | 150 | 150 | 200 | 150 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 30-90 | 90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 160 | 120 | 160 | 200 | 160 | 150 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 100 | 160 | 160 |
| முள்ளங்கி | 40 | — | 25 | 40 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | — | 10 | 40 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | — | — | — | 60 | — | 80 | 80 |

மூக்குள்ள மட்டும் சளி போகாது.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உங்கள் பிரச்சினை தீரும் எங்கள் பிரச்சினை தீருமா?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முடித்து பிரதமர் பதவியை தக்கவைத்துக் கொண்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கிடைத்த வெற்றியைத் தக்கமுறையில் பயன்படுத்தத் தெரியாத கூட்டு எதிரணியினர் தங்களுக்கான வெற்றியை தவறாகக் கணித்து, பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையாகக் கொண்டு வந்ததனூடு தமக்குக் கிடைத்த வெற்றியைப் பிசக்கிக் கொண்டனர் என்று கூறுவதே பொருத்துடையதாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முன்னாள் ஜனாதிபதியும் கூட்டு எதிரணியின் மூலகர்த்தாவுமாகிய மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திடவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

நம்பிக்கையில்லாப்பிரேரணையைக்கொண்டு வருவதில் மிகவும் இறுக்கமாக இருந்த மகிந்த ராஜபக்ஷ அந்தப் பிரேரணையில் கையெழுத்திடாதது ஏன்? என்ற கேள்விக்குப் பலவாறான பதில்கள் கிடைக்கப் பெறும்.

அதில் ஒன்று, சிலவேளை ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து வீழ்த்த முடியாமல் போனால், தமக்கு எதிரான நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதி தீவிரப்படுத்துவார் என்பது மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்கு தெரியும்.

அதாவது மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நடந்த நிதி விவகாரங்கள் தொடர்பில் மகிந்தவின் குடும்ப அங்கத்தவர்கள் அடிக்கடி விசாரணைக்கு உட்பட்டு வருகின்றனர். இதில் மகிந்த ராஜபக்ஷவின் மனைவிகூட விதிவிலக்கல்ல.

நிலைமை இதுவாக இருக்கையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தானும் கையெழுத்திட்டால்; குறைந்தது தொலைபேசியில் கூட பிரதமர் ரணிலுடன் கதைக்க முடியாத அவல நிலை தனக்கு ஏற்படும் என்பது மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்கு தெரியும்.

இந்நிலையிலேயே அவர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திடுவதைத் தவிர்த்தார் எனலாம்.

எதுஎவ்வாறாயினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திடுவதைத் தவிர்த்ததனால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவானவர்கள் அதில் உறுதியாக இருக்க முடியாதவர்களாக சறுக்கல் தீர்மானங்களை எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகினர்.

இவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய ஒரு சிறுபார்வை.

தவிர, எதுஎப்படி நடந்தாலும் அவர்கள் தங்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடுவார்கள். ஆனால் எங்கள் பிரச்சினைக்கு அவர்கள் தீர்வு காண்பார்களா? என்றால் அதுதான் இல்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டால், தங்களுக்குள் முரண்படுவதுபோல காட்டிக் கொண்டு அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமையால் தீர்வு காண்பது கடினம் என்பதாகக் கூறிக் கொள்வர்.

ஆக, என்னதான் பிரேரணைகளும் வெற்றி தோல்விகளும் வந்தாலும் எங்கள் பிரச்சினைக்கு அவர்கள் ஒருபோதும் தீர்வு தரமாட்டார்கள் என்பதுதான் மீண்டும் மீண்டும் நாம் படிக்கும் பாடம்.

---

வவுனியா வேப்பங்குளத்தில்

# பாடசாலை மாணவி சடலமாக மீட்பு

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் உள்ள ஒரு பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்று வந்த விஜயகுமார் நிலுக்சனா (வயது-16) என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த மாணவியின் பெற்றோர்கள் அரச உத்தியோகத்தர்கள் என்பதனால் இருவரும் பணிக்கு சென்றிருந்தவேளை மாணவி வீட்டில் தனியாகவே இருந்துள்ளார்.

மாலை 4.40 மணியளவில் இருவரும் வீடு திரும்பிய வேளை வீட்டின் அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட மகளை வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர். எனினும் மாணவி உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-250,281)

---

# கூட்டமைப்புக்கு ஐ.தே.கட்சி வழிமொழிந்தது

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவில், தவிசாளராக கூட்டமைப்பின் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டபோது அவரை தேசிய கட்சியானஐக்கியதேசிய கட்சி வழி மொழிந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இத்தொகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சி 12 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி 7 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 4 ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 2 ஆசனங்களையும் ஐ.தே.கட்சி 2 ஆசனங்களையும் பெற்றிருந்தமைகுறிப்பிடத்தக்கது.(ம)

---

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் முன்பள்ளி ஆசிரியர் சேவையின் தரம் 111 பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்காக ஏப்ரல் 07ஆம் திகதி நடைபெறவிருந்த திறந்த போட்டிப் பரீட்சையானது தவிர்க்க முடியாத காரணத்தினால் மறுதிகதி குறிப்பிடும் வரை பிற்போடப்பட்டுள்ளது.

மேலும் இப்போட்டிப் பரீட்சைக்கு எமது முன்னைய விளம்பரங்களில் கோரப்பட்ட அனைத்து தகைமைகளையும் கொண்டிருந்தும் 40 வயதுக் கட்டுப்பாடு காரணமாக விண்ணப்பிக்க முடியாதவர்களும் 20.04.2018 ஆம் திகதி 45 வயதினை பூர்த்தி செய்யாதவர்களாக இருக்கும் பட்சத்தில் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

இவ்விண்ணப்பங்களினை 2018.04.20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்க முடியும்.

மேலும் இப்பரீட்சை நடத்துதல் தொடர்பான திகதி சகல பரீட்சார்த்திகளுக்கும் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.ஏ.மோகனராஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் மேலதிக விபரங்கள் எவையும் தேவைப்படின் 021-2219939 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம)

---

16 மணித்தியாலங்களில்

# மூன்று குற்றச் சம்பவங்களில் தடயப்பொருட்களுடன் ஐவர் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 16 மணி நேரத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் உட்பட மூன்று வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது தடயப் பொருட்களுடன் 5 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமலகுணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் நேற்று புதன்கிழமை அதிகாலை 6 மணி வரையிலான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வட்டக்கச்சி கல்மடுக்குளப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி ஆற்று மணலை ஏற்றி பயணித்த 3 உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள்மூன்றுபேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இவர்களைக் கைது செய்து கொண்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் திரும்புகையில் தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி தோட்ட மண்ணை உழவு இயந்திரத்தில் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, தருமபுரம் 8, யூனிட் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸார் சுற்றிவளைத்து 400 லீற்றர் கசிப்புக் கோடாவையும் 80 லீற்றர் கசிப்பையும் மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியதோடு சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கி உள்ளனர்.

இச் சம்பவங்களின்போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள்தருமபுரம்பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், கைதான சந்தேகநபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமலகுணரட்ண தெரிவித்துள்ளார். (2-15)

---

# “காற்றுப்போன பிரேரணை” ஹக்கீம் நாடாளுமன்றில் கிண்டல்

(கொழும்பு)


தன்னுடைய நாடாளுமன்ற வரலாற்றில் எத்தனையோ நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைப் பார்த்துள்ள நிலையில், ஆரம்பிக்கும் போதே காற்றுப்போன நம்பிக்கையில்லாப் பிரேரணையை இப்போதே பார்ப்பதாக அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது, அரசாங்கத்தை இலக்காகக் கொண்டது. மகிந்த இதில் கையெழுத்திடவில்லை. அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் 3 குழுக்கள் செயற்படுவது தெரிகின்றது. இதில், ராஜபக்ஷக்களின் நீண்ட பயணத்தை இலக்காக கொண்டு செயற்படுகின்றமை காணமுடிவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

---

# சத்திய தரிசனம்



## புடலங்காயைப் பாருங்க

❖ ஆடை அழுக்கை நீக்க சோப்பும், நீரும் பயன்படுவது போல மன அழுக்கை நீக்க அன்பும், தொண்டும் பயன்படுகிறது.

❖ உன் இதயத்தை அன்பில் நன்றாக நனைத்துவிடு, செயல்களை நேர்மையிலும், உணர்ச்சிகளைக் கருணையிலும் நனைத்துவிடு. இப்படிச் செய்தால் நீ கடவுளை மிக விரைவாக அடைவாய்.

❖ மனதிலுள்ள எண்ணங்களை நல்லவையாக மாற்றிக் கொண்டால் உலகம் அதற்குத்தக்கவாறு காட்சியளிக்கும். கண்களில் தெய்வீகம் நிரம்பி வழிவதுடன், காண்பதெல்லாம் கடவுளாக இருக்கும்.

❖ கடவுளை நோக்கி மனதைத் திருப்பினால் மனம் இயற்கையாகவே உலக இன்பத்தை நாடுவதை விட்டுவிடும். பிறகு மனதின் மேல் நீங்கள் ஆதிக்கம் செலுத்துவது எளிதாகும்.


❖ புற்றின் மீது அடித்தால் பாம்பு சாவதில்லை. அதே போல் தீய சிந்தனை ஏற்படாமல் இருக்க உடலைத் தண்டிப்பதால் பயனில்லை. அந்த நினைவு ஏற்படாமல் மனதை ஒடுக்க வேண்டும்.

❖ புடலங்காயில் கல்லைக் கட்டினால் வளையாது வளரும். மனிதனுக்கும் கடமை என்னும் சுமையைக் கட்டினால் நேராக வாழ்வான்.

---

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

இறை அருள்



**புகுவிழா செய்யக்கூடாதவர்கள் யார்?**

மனைவிழாவிற்கு முன் சிரார்த்தம் செய்தவர்கள், மனைவியை இழந்தவர்கள், பெற்ற பிள்ளைக்கு சமக்காரியம் செய்தவர்கள், மனைவியிருந்தும் பரத்தையர்களிடம் தொடர்பு வைத்திருப்பவர்கள், மகனுக்குத் திருமணம் செய்து மருமகள் இல்லாதவர்கள், மகளுக்குத் திருமணம் செய்து மருமகன் இல்லாதவர்கள், உடன் பிறப்புக்களை அழைக்காதவர்கள். *(தொடரும்)*

# யூத் வி.கழகத்தை வெற்றி கொண்டு அடுத்த சுற்றில் சென்.அன்ரனிஸ்




கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி King of Jaffna 2018 கடந்த மாதம் ஆரம்பமாகி மிக விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டியில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியின் கலிஸ்ரன். கிறோசாந் மற்றும் டிவின்ஸன் ஆகி யோர் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டனர்.

உடுப்பிட்டி யூத் அணி சார்பில் அந்த அணியின் நட்சத்திர வீரர் திலீப் ஒரு கோல் போட்டார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென். அன்ரனிஸ் அணியின் டிவின்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இவ் வெற்றியின் மூலம் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

# உடுவில் பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி சம்பியனானது மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கியம்



'உடுவில் பிரதேச செயலகத்தின் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் - 2018 கடந்த வாரம் நிறைவுக்கு வந்தது.

30 இற்கும் மேற்பட்ட கழகங்கள் இத்தொடரில் பங்குபற்றியிருந்த நிலையில் கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றிவாகை சூடி கிண்ணத்தை வென்றுள்ளது.

'உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் - 2018' இல் சம்பியனான எமது கழகத்தின் வீர வீராங்கனைகளின் சாதனைகள்.

நடை பெற்ற போட்டிகளில் பெண்கள் பிரிவு- கரப் பந்தாட்டம் - முதலாமிடம், கபடி - முதலாமிடம், வலைப்பந்தாட்டம் - இரண்டாமிடம், பூப்பந் தாட்டம் - முதலாமிடம், கூடைப்பந்தாட்டம் - இரண்டாமிடம், எல்லே - இரண்டாமிடம், துடுப்பாட்டம் -முதலாமிடம், கரம் - முதலாமிடம், மேசைப்பந்தாட்டம்-இரண்டாமிடம், உதைபந்தாட்டம்-இரண்டாமிடம், கயிறுமுத்தல்- இரண்டாமிடம், தடகளப் போட்டிகள் - முதலாமிடம் மற்றும் ஆண்கள் பிரிவுப் போட்டியில் எல்லே - முதலாமிடம், கரம் - முதலாமிடம்,பூப்பந்தாட்டம் - இரண்டாமிடம், கரப்பந்தாட்டம் - இரண்டாமிடம், மேசைப்பந்தாட்டம் - முதலாமிடம், தடகளப்போட்டிகள் - முதலாமிடம் என்ற சிறந்த பெறுபேற்றைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்று சாதித்துள்ளது கோட்டைக் காடு மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கியம் விளையாட்டுக் கழகம். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# ஒரு ஆட்டமிழப்பிற்கு ஒன்றரை மணிநேரம்



நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியின் போது வோக்னரை அவுட்டாக்க இங்கிலாந்து அணியின் தலைவர் ரூட் 10 வீரர்களை அருகில் நிற்க வைத்துள்ளார்.

நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி 3-2 என கைப்பற்றியுள்ளதால், இரு அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளை இழந்து 307 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்பிற்கு 352 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

இதைத் தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 278 ஓட்டங்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்பிற்கு 258 ஓட்டங்கள் எடுத்ததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இந்நிலையில் இப்போட்டியில் நியூசிலாந்து அணிக்கு 9 ஆவது வீரராக களமிறங்கிய வோக்னரை அவுட்டாக்க இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் பல முயற்சிகளை செய்து பார்த்தார்.

சுமார் 1 மணி நேரம் 47 நிமிடங்கள் நின்ற வோக்னரை அவுட்டாக்க இங்கிலாந்தின் அனைத்து வீரர்களும் அவரை சூழ்ந்து நின்றனர். ஆனால் அது பலன் கொடுக்கவில்லை.

அதன் ஒரு வழியாக 103 பந்துக்கு 7 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் வோக்னர் அவுட்டானார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (க)

## சந்திரலிங்கம் ஞாபகார்த்த கிண்ணம்

# இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது கோல்டன்ஸ்ரார்-எல்லாளன் அணிகள்



அமரர் சந்திரலிங்கம் ஞாபகார்த்தமாக ரொக்கட் அணியினால் நடத்தப்பட்டு வரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் லீக் முறையிலான போட்டியில் A குழுவில் ரொக்கட், கோல்ட்ஸ்ரார் ரஜீவன்,ஆவரங்கால் மத்தி,வொறியஸ்,செங்கொடி, சில்வர் ஸ்ரார் ஆகிய ஏழு அணிகள் இடம் பிடித்து இருந்தன கோல்ட்ஸ்ரார் நடைபெற்ற அனைத்து போட்டிகளில் வெற்றி பெற்றது.

இதில் கோல்ட்ஸ்ரார் அணி தனது முதலாவது போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியை 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டது.

இரண்டாவது போட்டியில் ரொக்கெட் அணியை எதிர்கொண்டு 1 ஓட்ட வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

கோல்ட்ஸ்ரார் அணியின் மூன்றாவது போட்டியில் செங்கொடி அணியுடன் மோதியது.

இப் போட்டியில் 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் செங்கொடி அணியை வீழ்த்தியது.

கோல்ட்ஸ்ரார் அணி வொறியஸ் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அரை இறுதிப் போட்டியில் கோல்ட்ஸ்ரார் மற்றும் முரசொலி அணிகள் பலப்பரீட்சை நடத்தின. நாணய சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தெரிவு செய்தது கோல்ட்ஸ்ரார். அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்து பரிமாற்றங்களில் முரசொலி அணி 4 இலக்கை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. 110 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கோல்ட்ஸ்ரார் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மகிதரனின் அதிரடியின் உதவியுடன் 6.1 பந்துகளில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் மகிதனன் 19 பந்துகளில் 8 ஆறு ஓட்டங்கள் 1 நான்கு ஓட்டங்கள் உட்பட 59 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் சித்திரை புதுவருடப்பிறப்பன்று கோல்ட்ஸ்ரார் அணியும் எல்லாளன் அணியும் இறுதிப் போட்டியில் சந்திக்கின்றது. (க)

# உலக பூப்பந்தாட்ட பேரவையின் உலகக் கிண்ணப் பூப்பந்தாட்ட தொடர்



உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையால் (WTBF) நடத்தப்படும் 6 ஆவது உலகக்கிண்ணப் போட்டி டென்மார்க்கில் நியூபோ நகரில் ஆரம்பமாகியுள்ளது. விளையாட்டு ரீதியாக உலகத் தமிழர்களை ஒன்றிணைத்து குறித்த போட்டி நடத்தப்பட்டு வருகின்றதுடன், உலகப் பூப்பந்தாட்டப் பேரவையின் ஸ்தாபகரும் பேரவையின் தலைவருமாகிய கந்தையா சிங்கம் தலைமையில் இடம் பெற்றுள்ளது. அத்துடன் உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் ஆறாவது உலகக் கிண்ணச் சிறப்பிதழ் வெளியிடப்பட்டு பிரதிகளும் பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளுக்கும் பார்வையாளருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இலங்கை, கனடா, அவுஸ்திரேலியா உட்பட 15 நாடுகள் பங்குபற்றும் 270 போட்டியாளர்கள் கலந்துகொள்கின்றனர். இதேவேளை, போட்டியாளரைக் கொண்ட இவ் விளையாட்டில் 25 பிரிவுகள் கொண்டதோடு, பிரிவுகள் 11 வயதுக்குட்பட்டோரிலிருந்து 60 வயதுக்கு மேற்பட்டோரும் பங்கு பற்றும் வகையில் அமைந்துள்ளது. (க)

# வட மாகாணத்தில் 24 வைத்தியசாலைகள் வைத்திய அதிகாரிகள் இல்லாமல் இயங்குகிறது

## வட மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வைத்திய அதிகாரிகள் இன்றி 24 வைத்திய சாலைகள் இயங்கி வருகின்றன என தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜி.குணசீலன், எமது மண்ணிலே மருத்துவர்களை உருவாக்கி விட்டு மீண்டும் மருத்துவர்களுக்காக மத்திய அரசிடம் கையேந்தி நிற்கிறோம் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் 40 வது வருட நிறைவை முன்னிட்டு மாபெரும் யாழ் மருத்துவ கண்காட்சி நேற்று யாழ் மருத்துவ பீட வளாகத்தில் ஆரம்பமாகியது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்.பல்கலையில் இருந்து மருத்துவ துறையில் சாதனைகளை படைத்துள்ளோம். மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு அடிப்படை மருத்துவர்கள் உருவாக்கி வெளியேற்றியுள்ளது. அவர்கள் அனைவரும் சிறந்த மருத்துவர்களாக உலகம் முழுவதும் திறம்பட சேவையாற்றி வருகிறார்கள்.

இவ்வாறான நிலையில் வட மாகாணத்தில் ஏன் வைத்தியர்கள் இல்லை என்ற கருத்து அனைவர் மத்தியிலும் இருந்து வருகிறது. வைத்திய நியமனம் என்பது மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வைத்தியர் இடமாற்றம் மத்திய அரசு முடிவின் படி நடைபெறுகிறது.மாகாண அரசியனால் அவற்றை செயற்படுத்த முடியாதுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 24 வைத்தியசாலைகள் ஒரு வைத்திய அதிகாரியும் இல்லாமல் இயங்கி வருகிறது. மேலும் ஏனைய வைத்திய சாலைகளில் நியமிக்க வேண்டிய வைத்தியர் எண்ணிக்கை நிரப்பப்படவில்லை. 4 பேர் நியமிக்கப்பட வேண்டிய வெற்றிடத்துக்கு 2 பேர் கடமையாற்றுகிறார்கள். எனவே வைத்திய அதிகாரிகள் நியமனம் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் அந்த குறைபாட்டை நீக்க வைத்தியர்கள் முன்வர வேண்டும்.

போர்ச்சூழல் மற்றும் பொருளாதார நெருக்கடியான கடுமையான காலத்திலும் மருத்துவத்துறை வடக்கில் இயங்கிசிறந்த மருத்துவர்களை உருவாக்கியுள்ளது. ஆனால் எமது மாகாணத்துக்கு வைத்திய தேவைக்கு மத்திய அரசிடம் கையேந்தி நிற்கிறோம். உங்களை மருத்துவர் ஆக்கிய மண்ணில் உள்ள மக்களுக்காக சிறு காலத்தை அந்த மண்ணிலே செலவளிக்க மருத்துவர்கள் முன்வரவேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## வல்வெட்டித்துறை...

என அடையாளம் காணப்பட்டார்.

சடலம் காணப்பட்டமை தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணையினை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் ஒப்படைத்து பிரேதபரிசோதனை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-60)

## தொடருந்து மோதி...

மாணவனொருவன் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 3.30மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கற்குழியில் வசித்து வரும் பாடசாலை மாணவனான எஸ்.சுபலோசன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த தினம் குடும்பத்தாருடன் சிறு கருத்து முரண்பாட்டில் ஈடுபட்டு வீட்டை விட்டு வெளியேறி சென்றுள்ளார். பின்னர் வவுனியா, தேக்கவத்தை பகுதியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தபால் புகையிரதத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

## கை மற்றும் வீணை...

உப தவிசாளர் தெரிவு நேற்று புதன் கிழமை பிற்பகல் 02 மணியளவில் உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது. தவிசாளர் தெரிவுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தியாகராசா நிரோஸ் இனையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சண்முகராஜா ஸ்ரீகுமரனையும் பிரேரித்தது.

தவிசாளர் தெரிவு பகிரங்கமாகவா இரகசியமாகவா நடத்தப்படவேண்டும் என உறுப்பினர்களிடம் கோரப்பட்டபோது பகிரங்க வாக்கெடுப்பாக நடத்தப்படவேண்டும் என 34 உறுப்பினர்கள் கோரினர். இரகசிய வாக்கெடுப்பாக நடத்தப்படவேண்டும் என எவரும் கோரவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இந்நிலையில் 38 உறுப்பினர்களை கொண்ட சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களும் ஈபிடிபியின் 06 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 03 உறுப்பினர்களுமாக 24 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான தியாகராசா நிரோஸ்க்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 06 உறுப்பினர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரேரித்திருந்த சண்முகராஜா ஸ்ரீகுமரனுக்கு வாக்களித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும் சுயேட்சைக் குழுவின் 04 உறுப்பினர்களும் நடுநிலை வகித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான சி.நவபாலன் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

தொடர்ந்து நடைபெற்ற உப தவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான ம.கபிலன் உப தவிசாளராக போட்டியின்றி தெரிவானார். (ம-4)

## கேப்பாப்பிலவில்...

இருந்து இந்த ஆண்டு தொடக்கத்தில் விடுவிக்கப்பட்ட காணிக்குள் இருந்து 25 பராக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை கேப்பாபிலவு மேற்கு பகுதியில் உள்ள வீதி ஓரமாக விடுவிக்கப்பட்ட காணி பற்றைக்காட்டிற்குள் விறகு வெட்ட சென்ற நபர் ஒருவர் நிலத்தில் மறைந்து கிடந்த குண்டுகளை இனம் கண்டுள்ளார்.

இது தொடர்பில் குறிப்பிட்ட நபர் முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து முள்ளியவளை பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அனுமதிகோரியுள்ளார்கள். இந்நிலையில் மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன சிறப்பு அதிரடிப்படையினர் குறித்த பராக் வகையான குண்டுகளை மீட்டுள்ளனர்.

81 மோட்டார் குண்டுவகையினை சேர்ந்த குறித்த 25 பராக் குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்றும் இவற்றை நேற்று பாதுகாப்பான ஒருபகுதியில் வைத்து தகர்த்து அழிக்கப்பட்டுள்ளதாக சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (ம-281)

## பிரேரணைக்கு ஆதர...

கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அவர்கள் 6 பேரையும் அமைச்சரவையிலிருந்து நீக்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 33 பேர் கையொப்பமிட்ட கடிதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர்களை பதவி நீக்குவதற்கும் நியமிப்பதற்குமான அதிகாரம் ஜனாதிபதியிடமே உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கூட்டமைப்பால்...

யேற்றாமல் நீரை விநியோகித்தல், பிற மாகாணத்தவர்களை வடக்கு-கிழக்கில் அரச பணிகளில் அமர்த்தாமை, சிங்களக் குடி யேற்றங்களை நிறுத்தல், வெளிமாவட்ட மீனவர்களை வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பதை தடுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுத்து மூல உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்துமூல உறுதிமொழி வழங்கினால் மட்டுமே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமரிடம் நிபந்தனை விதித்தது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (ம)

## நம்பிக்கையில்லா...

கொண்டு வரப்பட்டுள்ளதோடு, அரசாங்கத்திற்கு ஆதரவாக 23 நம்பிக்கையில்லா பிரேரணைகளும், அமைச்சர்களுக்கு எதிராக 13 நம்பிக்கையில்லா பிரேரணைகளும் சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகருக்கு எதிராக ஒரு பிரேரணையும் முன்வைக்கப்பட்டுள்ளன.

1957ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாக அத்தனகலை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியடைந்த பிரதமர் S.W.R.D பண்டார நாயக்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணையே இலங்கை வரலாற்றில் பிரதமர் ஒருவருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட முதலாவது நம்பிக்கையில்லா பிரேரணையாகும்.

அதனை தொடர்ந்து 1975ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவிற்கு எதிராக 2-வது பிரேரணையும் கொண்டுவரப்பட்டது.

S.W.R.D பண்டார நாயக்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து 45 பேரும், ஆதரவாக ஒருவர் மாத்திரமே வாக்களித்தமையினால் குறித்த பிரேரணை தோல்வியில் முடிவடைந்தது.

அடுத்ததாக, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 43 உறுப்பினர்களும் எதிராக 100 உறுப்பினர்களும் வாக்களித்தமையினால் குறித்த பிரேரணை தோல்வியில் முடிவடைந்தது.

3வதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு எதிராகவே நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் தயார்படுத்தலில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையில் அக்கட்சியின் சார்பில் 52 பேர் கைச்சாத்திட்டதுடன் மகிந்த ராஜபக்ச மாத்திரம் கைச்சாத்திடவில்லை.

நேற்று புதன்கிழமை இரவு 9.30 க்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் நம்பிக்கையில்லா பிரேரணை 46 மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்துள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய சபையில் அறிவித்தார்.

அதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அமைதியாக சபையை விட்டு வெளியேறினர். ஜே.வி.பி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுடன் உரையாடினர்.

அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. சிவசக்தி ஆனந்தனும் ஆதரவாக வாக்களித்தார்.

அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார்.

இதேவேளை கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் வெடி கொழுத்தி மகிழ்ச்சி வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

# பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க ஒவ்வொருவரும் 5 கோடி வாங்கியுள்ளனர்

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று மாதங்களில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென உறுதி வழங்கப்பட்டதன் பின்னரே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்ததாக, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அத்துடன், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கு ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஐந்து கோடி ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் விமல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது நாடாளுமன்றில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். குறித்த விவாதத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் ஆளும் தரப்பினர் மனசாட்சிப்படி இல்லாமல் பண சாட்சிப்படியே உரையாற்றினர். எனக்கு முன்னர் உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீமையும் பணமே பேசவைத்தது. கண்டி-திகன சம்பவத்துக்கு பிறகு, பொலிஸார் மீது கடுமையான விமர்சனங்களை முஸ்லிம் அமைச்சர்கள் முன்வைத்திருந்த போதிலும், தற்போது அரசுக்கு ஆதரவளித்துள்ளனர்.

அத்தோடு, அடுத்த மூன்று மாதங்களில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென உறுதியளிக்கப்பட்ட பின்னரே தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பிரதமருக்கு ஆதரவளித்துள்ளது.

உண்மையில் இப்பிரேரணைக்கு எதிராக பேசியவர்களெல்லாம் பணத்துக்காகவே பேசினர். ஆதரவாக பேசுபவர்களுக்கு தலா 5 கோடி ரூபாய் வீதம் பரிமாறப்பட்டும் உள்ளது. எனவே, அரசு உடனே பொதுத் தேர்தலை நடத்தவேண்டும்.

பாலித ரங்கே பண்டார போன்றவர்களுக்கும் முதுகில் குத்து இருக்கின்றது. இவற்றையெல்லாம் இனிவரும் நாட்களில் எதிரணியில் இருந்தவாறே நாம் இன்பமாக பார்த்து மகிழ்வோம் என்று நகைச்சுவை கலந்த ஆத்திரத்துடன் கூறினார். (ம)

### பிரேரணை விவாதத்தை பார்வையிட வந்த சீனர்கள்

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றிற்கு நேற்று சீன இளைஞர் யுவதிகள் பெருமளவானோர் பார்வையாளர்களாக வந்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் நேற்று புதன்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்றது.

இந்நிலையில், குறித்த சீன இளைஞர் யுவதிகள் நாடாளுமன்றிற்கு வருகை தந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. அத்தோடு, இவர்கள் நாடாளுமன்ற செயற்பாடுகளை பார்வையிட்டுச் சென்றனர். (ம)

## நல்லூர் பிரதேச சபை...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி க.வாசுகியை பிரேரித்தனர். அதனை தொடர்ந்து வாக்களிப்பு மூலம் தவிசாளர் தெரிவு இடம்பெறும் என ஆணையாளர் அறிவித்தார்.

வாக்களிப்பு இரகசிய முறையிலா? பகிரங்க முறையிலையா? நடைபெற வேண்டும் என உறுப்பினர்களிடம் கேட்ட போது. பகிரங்க வாக்களிப்பு நடைபெற வேண்டும் என பெரும்பான்மையான உறுப்பினர்கள் கோரியதை அடுத்து பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரேரித்த த.தியாகமூர்த்தி 12 வாக்குகளையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரேரித்த க.வாசுகி 7 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து உப தவிசாளர் தெரிவின் போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜெயகரனை பிரேரித்தது. அதன் போது வேறுயாரும் உப தவிசாளராக பெயரை பிரேரிக்காத நிலையில் உப தவிசாளராக ஜெயகரன் தெரிவானார். (ம-4)

## தியாக தீபம் திலீப...

வமாக தமிழர்களின் அரசியல் விடுதலையினை பெற்றுக்கொள்வதற்காக அகிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து தன்னையே ஆகுதியாக்கியவர் தியாகி திலீபன்.

அவரது நினைவிடம் நேற்றைய தினம் மீண்டும் அதே வடிவத்தில் அதே இடத்தில் மீள்கட்டுமானம் மேற்கொள்வதற்கான பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபையினால் குறித்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. யாழ்.மாநகர சபையின் ஆட்சி அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் நிறுவப்பட்டிருக்கும் இச்சூழ்நிலையில், அவர்களது முதலாவது உத்தியோகபூர்வ வேலைத் திட்டமாக இவ்விடயம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. (ம-4-9-281)


### பதவி வெற்றிடம்

இலங்கையின் முன்னணி நிறுவனமான Dynamic Holdings Lanka (Pvt) Ltdக்கு முழுநேர வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் வடக்கு, கிழக்கு, மலையக தமிழ் இளைஞர்கள், யுவதிகள் தேவைப்படுகின்றனர். தங்களுக்கு சாதாரண தர(O/L) தகைமை இருப்பின் தொடர்புகொள்ளலாம்.

- வயதெல்லை 18 - 35
- அனுமதிகள் அவசியமற்றது.
- பயிற்சி இல்லாதோருக்கு பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சி முடிவில் சான்றிதழுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு.

தொடர்பு: 0775566224, 0778485328

(3520)

### DCM

யாழ்.நகர் (வேம்படி சந்தி அருகாமை)

சுன்னாகம் புகையிரத நிலைய வீதி

2020 A/L

கலை, வர்த்தக, தொழில்நுட்ப புதிய பிரிவுகள்

ஆரம்பம் : 07.04.2018

சனிக்கிழமை 8.00am

### BARATHY

சித்தன்கேணி

அண்மையில் வெளிவந்த O/L பரீட்சை பெறுபேறுகளில் அதியுயர் பெறுபேறுகளை பெற்று உங்கள் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் எங்கள் நிறுவனத்துக்கும் பெருமை ஈட்டித்தந்த மாணவர்களினை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இதேபோல் நீங்களும் சிறந்த பெறுபேறு பெற்றிட

O/L DAY CLASS

நாளை ஆரம்பம்

06.04.2018 வெள்ளி 8am

எமது வழமையான பிரசித்தி பெற்ற ஆசிரியர் குழுவினால். உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்

### DCM

சுன்னாகம்

புகையிரத நிலைய வீதி

2020 A/L

அரசியல் விஞ்ஞானம்

பொன் சந்துரு

ஆரம்பம் : 07.04.2018

சனிக்கிழமை 2.00pm

### Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2019 மாணவர்களின் வட, கிழக்கு மாகாணங்களில் பாடசாலையில் நடைபெற்ற பரீட்சையில் முதலிடம் வகிக்கும் எமது மாணவர்களின் (இதுவரை கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள்)

| பாடம் | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| SFT | S.லாவண்யா | 97 |
| | J.ஜெனுசன் | 91 |
| | N.கௌதமன் | 86 |
| | பவதாரணி | 82 |
| | ஜெனார்த்தனி | 77 |
| | தனஞ்செயன் | 70 |
| Bio-Tec | சந்துஜா | 91 |

A/L 2020

புதிய பிரிவு - 07.04.2018

தொடர்பு: 077 017 5346

கிளைகள்: புத்தூர் (புத்தூர் சோமஸ்கந்தா)

(C-2107)

### Architectural CAD Centre

Personal - Group - Visiting Classes

Jaffna - Vavuniya - Colombo

Diploma in Engineering Drawing &

Auto CAD

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)

University of Peradeniya

University of Moratuwa

Contact No:0718617972

### சுன்னாகத்தில்

O/L Day Class

ஆரம்பம்:

09.4.2018 திங்கள் 8am

யாழ் நகரின் பிரபல ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவையில்.

உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

குறிப்பு: சனி, ஞாயிறு தினங்களில் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்

பொருளியற் கல்லூரி

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்

### A/L 2020

ஊடகவியல்

Media Studies

திரு.என்.கஜிதரன்

B.A (Hons) Spl in media studies

M.A (mass communication & Journalism)

கலை, தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கானது

- பொருளியற் கல்லூரி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
- பொருளியற் கல்லூரி, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
- BARATHY, சித்தன்கேணி

வட மாகாணத்தின் தனித்துவம் மிக்க ஒரேயொரு ஆசிரியரின் வழிகாட்டலில் நீங்களும் இணைந்திடுங்கள்.

விரும்பிய இடங்களில் அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம்.

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550*/=Kg

கனடா - 1050*/=Kg

தொடர்புகளுக்கு: 0768226240

மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1982)

### பிரத்தியேக/குழு வகுப்புக்கள்

| | |
|---|---|
| கணக்கீடு A/L2019, A/L2020 | வணிகக்கல்வியும் கணக்கீடும் O/L2018, 10 |
| Mr.Balakajen | |
| கந்தர்மடம் | கொழும்புத்துறை |

T.P: 076 565 5956

(3489)

### A/L வரலாறு 2020

M.பத்மன்

M.A (History)

★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

★ ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்

கற்பிக்கும் இடங்கள்

DMI, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

உயர்கலைக் கல்லூரி, குளப்பிட்டி.

### A/L 2K20

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

ஆரம்பம்: 07.04.2018

காலை - 8.00 மணி

DMI JAFFNA

(C-2080)




### சபரிகிரீசன் மலருக்கான வாழ்த்துரைகளையும், ஆக்கங்களையும் (கட்டுரைகள்) வரவேற்பதற்கான அழைப்பு

அன்புடையீர்.

கோடான கோடி மக்கள் வழிபாடு செய்யும் பகவான் சபரிமலை ஸ்ரீ ஐயப்பனின் தெய்வீக தரிசனம் 1994 ஆம் ஆண்டு முதல் மாலை அணிந்து விரதமிருந்து சபரி மலையில் ஐயனின் அருட்கடாட்சத்தைப்பெற்றுக் கொண்டவரும், தொடர்ந்து புனிதமான 18 படிகளைக் கடந்து சபரிமலை ஐயப்பனின் தரிசனம் பெறுவதுடன் 2018-ம் ஆண்டு 25ஆவது தடவையாக,18 படிகளின் பூசையும் செய்யும் ஐயன் அருள் கிடைத்தது அவர் செய்த பெரும் பாக்கியமாகும். அவரின் புனிதமான 25-வது வருட சபரிகிரீசன் விழா செய்யும் பாக்கியமும் நமக்கு கிடைத்த பெரும் பேறாகும்.

தங்கள் வாழ்த்துக்களையும் புனிதமான ஐயப்பனின் கட்டுரைகள், ஆன்மீகக் கட்டுரைகளையும் சபரிகிரீசன் மலருக்கு (ஐயப்பனின் ஆவணமாக இருப்பதற்காக) தங்களிடம் இருந்து தமிழ்.ஆங்கில மொழிகளில் அனுப்புமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம். அனுப்பவேண்டிய இறுதித் திகதி 30.04.2018.

தங்கள் சிறிய புகைப்படம் ஒன்றும் அனுப்புமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
Sabarikirisan Malar Editorial Board
24, Sophia Road, Markham, ON, L3S 3W9
Canada.
Email: brotherking@gamil.com - Tel: 6474496098

சபரிகிரீசன் விழா, ஐயப்பா யாத்திரை
சபரிகிரீசன் மலர் குழு,
சபரிமலை 25-வது யாத்திரைக்குழு
Ayyapa Pilgrimage
www.ayyapapilgrimage.com

யாழ் தொடர்பு: ஈழத்து சபரிமலை கோண்டாவில்

021 222 7688, 077 711 0629

(3521)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.